314

314
2-57

ஸ்ரீ நருஸிம்ஹ ப்ரியா

-: ஸ்ரீ கனகவல்லித் தாயார் :-

ஸம்புடம் 16 } வருஷச்சந்தா ரூ 3-0-0 { துன்முகி ஷு
ஸஞ்சிகை 3 } தனிப்ரதி அணா 0-4-0 { பங்குனி மீ

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் — 48
2. மஹாவீரவைபவம் — 51

[ஸ்ரீ' உப. வித்வான், பாதூர், ஸரளகவி, ராகவாசார்ய ஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர், ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

3. நூற்றெட்டுத் திருப்பதிகள் — 55
4. ஆசாரம் — 57

[ஸ்ரீ. உப. சிலுக்கூர், வித்வான், மா. வேங்கடராகவாசார்யர், ஸ்ரீகார்யம், ஏஜண்ட் ஹைதராபாத் ஸ்டேட் கோயில் இன்ஸ்பெக்டர், ஹைதராபாத்.]

5. ஒரொன்றுதானே — 59

[ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, அட்வோகேட், சென்னை.]

6. ஆசார்ய ஹ்ருதயம் — 63

[ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி, பம்பாய்.]

7. பெரியோர்கள் பக்கலில் - 3 — 64

[ஸ்ரீ. உப. வேதாந்த வாவதூக, வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீஅஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

8. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் — 67
9. ஹம்ஸஸந்தேசம் — 71

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]

10. சாரீரகார்ச்சனை — 73

3வது வார்ஷிக ஸ்ரீ வாத்ஸ்ய வரததேசிக ஸபா

டி ஸபை கும்பகோணம் பாட்ராசாரியார் தெருவில் ஹேவிளம்பி ஹூ சித்திரை மீ 26உ ஆரம்பித்து (8-5-57) 30உ (12-5-57) முடிய நடைபெறும்.

அப்பொழுது ஸ்ரீபாஷ்யம் ச்ருதப்ரகாசிகையுடன் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் எழுத்துப் பரீக்ஷையும் நடக்கும்.

அதில் கிளாஸ் வாரியாகத் தேறியவர்களுக்கு முறையே ரூ. 25, 20, 15 என்றும் விடைகளைக் குறிப்பிட்ட வ்ருத்தத்தில் சுலோகமாய் எழுதுகிறவர்களுக்கு 35, 30, 25 என்றும் ஸன்மானம் அளிக்கப்படும்.

வில்லூர், நடாதூர், ஆசுகவிஸார்வபௌம, **ஸ்ரீநிவாஸராகவாசாரியர்.**

314
2-57

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 16 } துர்முகி ஹூ பங்குனி மீ { ஸஞ்சிகை 3

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

210737.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

முக்காலத்தையும் அறியக்கூடிய முனி ச்ரேஷ்டர்கள் வஸித்த நாட்களில் ஸமூஹத்தில் ஒவ்வொருவரும் தங்களுடைய கடமையைச் சரிவர உணர்ந்திருந்தனர் எனக் கூற முடியும். ஆனால் காலப்போக்கில் இவ்வித சக்திவாய்ந்தஜ்ஞானிகள் மறைய ஆரம்பிக்கவே ஸமூஹத்தின் பொது மக்களின் தன்மையும் மாறவாரம்பித்தது. ஆகவே இவர்களுக்குக் கடமையை எடுத்து உரைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தானாகத் தெரிந்துகொள்ள முடியாதவருக்கு சொல்லிக்கொடுத்துத்தானே ஆக வேண்டும். இவ்விதம் போதிப்பது ஒரு சிலருக்காயின் அது ஸுலபம். ஆனால் பலருக்காயின் அது கடினம். அதாவது ஒரு ஸமூஹத்தில் பலருக்கு உண்மைகளை எடுத்துரைக்க வேண்டிய ஸந்தர்ப்பம் ஏற்பட்டால் இவ்வுண்மையை எல்லோருக்கும் எடுத்துக் கூறும் விதம் ரஹஸ்யமாக இராமல் பஹிரங்கமாக இருக்கும் என்பதுதான். இதைத்தான் ஸாமாந்யர்கள் ப்ரசாரம் எனக் கூறுகிறார்கள். ஆனால் ஸமீப காலத்தில் 'ப்ரசாரம்' என்ற சொல் ஒருவித ஏளனமான கருத்தைக்கொண்டதாகத் தோன்றுகிறது. அப்படி நினைக்கக் கூடாது. ப்ரசுரிப்பவர் என்றால் ஒரு புஸ்தகத்தை வெளியிடுபவர்தானே. அதேபோல் தான் கருத்துக்களை வெளியிடுபவர்களை ப்ரசாரகர்கள் என்றும், வெளியிடுதலை ப்ரசாரம் என்றும் கூறுகிறோம்.

இப்படி தர்மங்களை விரும்புபவர்கள் தர்மங்களையும், தனிப்பட்ட கொள்கைகளை விரும்புபவர்கள் அக் கொள்கைகளையும் ப்ரசாரப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதல்லவா.

ஸமீப காலத்தில் இந்தியா தனது காஷ்மீர் ஸம்பந்தமான கொள்கைகளைச் சரிவர உலகத்திலுள்ள நாடுகளுக்கு எடுத்து நன்கு ப்ரசாரப்படுத்தாத காரணத்தால் அந்நாடுகள் இந்தியாவின் கொள்கையை நன்கு புரிந்துகொள்ளாமல் பாகிஸ்தானுக்கு அநுஸரணையான அபிப்ராயத்தைக் கடைப்பிடிக்கின்றன என்றுகூடக் கூறுவதைக் கேட்கிறோம். இதற்கு நேர்மாறாக பாகிஸ்தான் தன் சொந்த எண்ணங்களை வெளிக்காட்டாமலும், உண்மைபோல் தோன்றக்கூடியவைகளை மட்டில் வெளிச்சுக் காட்டி இந்தியாவுக்கு நேரிடையாக பொய் ப்ரசாரம் செய்து வருகிறது என்பது உண்மை. இந்த வ்யவஹாரத்தில் பாகிஸ்தானின் பொய் ப்ரசாரம் என்பது உலக வல்லரசு நாடுகளில் வேரூன்றியிருக்கும் அரசியல் கொள்கையாகிய 'விக்ரஹம்' எனப்படும், பஞ்சதந்த்ரத்தில் விளக்கப்படும் முக்ய தந்த்ரமாகும். இந்தியாவை பலமான நாடாக வளர விடாமல், இந்தியாவின் கௌரவம் உலக அரங்கில் உயர்ந்து விடாதபடி தடுத்து வைக்க, நமது அண்டை நாடாகிய பாகிஸ்தானுக்கும், நம் நாட்டுக்கும் ஓர்வித பகையை உண்டாக்கி அதை வளர்த்து வருவதேயாகும். இது ஓர் அரசியல் தந்த்ரம். எல்லா நாடுகளும் நம் நாட்டு விஷயத்தில் இக் கொள்கையை அநுஸரிப்பதாகக்கூறவியலாது. ஆனாலும் பொய் ப்ரசாரத்தினால் நம்மைப் புரிந்து கொள்ளாத நாடுகள் பல. இதனால் தான் சரியானபடி நமது கொள்கைகளை அயல் நாடுகளில் ப்ரசாரம் செய்யவேண்டும் என பல அரசியல் வாதிகள் ஸமீபத்தில் கூறி வருகிறார்கள். ஆத்மீகத் துறையில் பாடுபடுபவர்களுக்கும், அரசியல் துறையில் பாடுபடுபவர்களுக்கும் பலவித வித்யாஸங்கள் உண்டு. இவர்களுடைய நோக்கங்களும், மார்க்கங்களும், வேறு வேறுதான். ஆனால் இப்பொழுது ப்ராசீன முறைப்படி கையாளப்பட்ட நியாய, நியதிகள்

புறக்கணிக்கப்படுவதை நாம் காண்கிறோம். பாரதப் போரில் தர்மத்தைக் காக்கும் முறையில் போர் நடந்ததாகவும், போருக்கும் பல நியதிகள் உண்டென்றும் போர் முனையிலும் ஓர் பகவத்கீதை உதயமானதுபோல் ஸாதுக்கள் வாழ முடியுமென்றும் நாம் படித்தறிகிறோம். ஆனால் தத்காலத்தில் போரில் வெற்றியோ தோல்வியோ கிடைப்பதில்லையென்றும் அமைதியை நாடும் மக்களிடையே ஏற்படும் அல்லது ஏற்படுத்தப்படும் ஸம்பவங்களினால் தான் போரின் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படுகிறதென்றும், பொது மக்கள் செத்து மடிந்தே, போர்நிற்கிறதென்றும் நாம் பார்த்து வரும் உண்மைகள்.

இது போலவே ஆத்மீகத் துறைகளில் உழன்று வருபவர்கள் ப்ரசாரத்தையும், தந்திரங்களையும் கையாளுகிறார்கள் என்றால், இம்மாதிரியாக ஆத்மீக தத்துவஞ்ஞானிகள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களை நாம் என்னென்று நினைப்பது. காலப் போக்கையறிந்து, அதற்கு அநுகுணமாக இவர்கள் நடந்துகொள்கிறார்கள் என்று ஸமூஹம் பெருமைப்படுமாயின் ஸமூஹத்தைப்பற்றி நமது கருத்துக்களையும் மாற்றியமைத்துக்கொள்ள வேண்டாமா.

அதாவது ப்ரசாரம் என்பது அரசியலரங்கில் மட்டில் உபயோகிக்கப்படுகிற ஸாதனம் இல்லை. நமது வாழ்க்கையில் எல்லாத் துறைகளுக்கும் அவசியமாகிய ஸாதனம் என்று இனிக் கொள்ளவேண்டும். இதை நாம் அநுஸரித்தலும் அவசியம் என்றுகூட தோன்றவாரம்பிக்கிறது. நமது ஆசார்ய ச்ரேஷ்டர்கள் சாஸ்த்ர, ஸம்ப்ரதாய முறைகளின்படி இதை யங்கீகரிக்காமல் போனாலும், ஸமூஹநிலைக்கேற்றவாறு நம்மை அனுமதிக்கத்தான் வேண்டி வருகிறது. என்னே நவீன உலகம்!

ஸமீபத்தில் அரசியல் சபைகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் ஸமயங்களில் அரசியலில் ஈடுபடும் கட்சிகள் எவ்விதம் தங்கள் பச்சோந்திக் கொள்கைகளை நம்மிடையே வெளிப்படுத்தினார்கள் என்பதை நாம் நன்கறிவோம். காலத்திற்கேற்ற கோலம் இவர்களுக்கு அநுமதிக்கப்பட்டிருக்கிறதல்லவா. இது ஒரு ராஜதந்த்ரம். ஸமீப காலம்வரை காணப்பட்ட வகுப்புவாதப் பேச்சும், ப்ராஹ்மண த்வேஷமும் இப்பொழுது மறைந்து ஆதரவுப் பேச்சுக்களும், அன்பும் மலிந்து வருவதை நாம் பார்க்கிறோம். இதனால் நாம் ஸந்தோஷப்படுவதற்கில்லை. திடமான கொள்கைகள் இல்லாதவனின் அன்புப் பேச்சுகள்கூட நமக்கு ஆபத்தில் முடியும் என்று புராதனக் கூற்று நமக்கு நினைவில் வருகிறது. இது சாணக்ய நீதிக்கு உகந்தது. அரசியல் தத்துவத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. ராஜீய முறையில் அநுகூல பலன்களைக் கொடுக்கவல்லது. உலகஸுகம் தாத்காலிகமாயினும் உலக ஸுகத்தைக் கொடுக்கவல்லது. ஆகவே விரும்பத் தக்கது. ஆனால் பேரானந்தத்தையும், நிரதிசயமான ஸ்திரமான இருக்கையையும் கொடுக்கக்கூடிய ஜீவேச்வர தத்துவத்தை உணர்த்துவதற்கு இம்முறைதான் வேண்டுமோ, இது அவசியங்கூடத்தானா என்றெல்லாம் நாம் யோசித்துப் பார்க்கவேணும்.

சில காலத்திற்கு முன் நடந்த ஸம்பவம் ஒன்று இங்கு ஞாபகத்திற்கு வருகிறது. ஸம்ப்ரதாய விஷயங்களில் பண்டிதர்களில் பலர் அபிப்ராயபேதங்களுடன் வாது புரிந்தனர். தங்கள் தங்கள் கொள்கைகளைப்பற்றி க்ரந்தங்களும், க்ரந்தங்களுக்குக் கண்டனங்களும், கண்டனங்களுக்கு மண்டனங்களும் எழுதவாரம்பித்தனர். இது ஸமயம் நமது ஸமூஹத்தில் இருந்து புகழ் எய்திய ப்ரஸித்த பண்டிதர்களில் ஒருவர் இதில் ஈடுபடுவதை விரும்பவில்லை. இவ்விதம் இப்படி மௌனமாக இருக்கலாமா என்று பலர் அந்த ஸ்வாமியைக் கேட்கவே, அந்த ஸ்வாமி பின் வருமாறு பதிலளித்தார். 'கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது கடலளவு' என்பார்கள். அதாவது புராதன முனிச்ரேஷ்டர்களாலும் ஆசார்யச்ரேஷ்டர்களினாலும் எழுதிவைக்கப்பட்ட ஆயிரக் கணக்கான புஸ்தகங்களைப் படித்து அவைகளின் கருத்துக்களையே நாம் நன்கு உணர்ந்து நடக்க முடியாத நிலையில், நாம் வேறு புதுப்புது க்ரந்தங்கள் எழுதுவதில் அர்த்தமில்லை. இது வீண் ப்ரயாஸை. இதைக் காட்டிலும் பூர்வா

சார்யர்களின் க்ரந்தங்களை சரியானபடி நாம் புரிந்துகொள்ளும் வழியில் ப்ரவசனங்கள் செய்யவேண்டியதே ஆசார்யர்களின் கடமை. பெரிய மஹான்களாகிய பண்டிதர்களின் பொறுப்புகூட என்று உணர்த்தினார் அந்த ஸ்வாமி. அதாவது மேலும் மேலும் புஸ்தகங்களின் எண்ணிக்கைகளை அதிகரிப்பதைக் காட்டிலும் உள்ள உயர்ந்த க்ரந்தங்களின் உட் கருத்துக்களைப் பலருக்குப் புகட்டவேண்டும் என்பது தான் மிகவும் முக்யமானது. இதுதான் உண்மையான ப்ரசாரம். இம்மாதிரி ப்ரவசனங்கள் மிகவும் அவசியந்தான் என்பது தத்கால ஸ்திதியையநுஸரித்துங் கூற வேண்டியிருக்கிறது. எப்படியாயினும் வீண் வாதங்களையும் ப்ரதிவாதங்களையும் புஸ்தகரூபமாக வெளியீட்டு, ஏராளமான பணச் செலவில் மனக்கசப்பை ஸம்பாதித்துக்கொள்வதென்பது எவ்வளவு அவசியம் என்பதை பெரியோர்கள் ஆலோசித்துப் பார்த்து அம்மாதிரி செயல்களில் ஈடுபடாமல் இருந்தால் நன்றாக இருக்கும். அப்படியில்லாவிட்டால் வாத க்ரந்தங்கள் மலிவாயும், இதற்குப் பெரிய இடத்து ஆதரவுகளும் கிடைத்து விடவே இதைக் காணும் இதரர்கள் ஸாதுக்களாயினும் வாளாவிருக்க முடியாமல் தங்களுடைய உட் கருத்துக்களை எப்படி வெளியிடுவதென்று யோசிக்க வேண்டிய ஸந்தர்ப்பம் ஏற்பட்டுவிடுகிறது. யோசிக்காமல் இருக்க முடியுமா? இம்மாதிரியான ஸந்தர்ப்பத்தை நமது ஸமூஹத்தில் ஏற்படுத்தியவர்கள்தானே இதன் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

* * * * * * *

நம் ராஜ்யத்தின் தென் ஜில்லாவில் காருக்குறிச்சி என்ற புனிதமான அக்ரஹாரவாஸியும் நமது ஸ்ரீ ஸந்நிதியில் [ஸ்ரீ அஹோபில மடத்தில்]ப்ரஸித்தர்களாய் மூர்த்தாபிஷிக்தர்களாக வீற்றிருந்த காருக்குறிச்சி ஸ்ரீ அழகியசிங்கர்களில் ஸ்ரீ காருக்குறிச்சி சின்ன அழகியசிங்கரின் (பூர்வாச்ரமத்து) திருக்குமாரராக எழுந்தருளியிருந்த வித்வான், ஸ்ரீ. உப. கோபாலரங்காசாரியர் ஸ்வாமி தனது சதாபிஷேகம் ஸமீபித்த ஸமயத்தில் பரமபதித்தாரென்பதைக் கேட்டு வருந்துகிறோம். பெரியதோர் வம்சத்தில் அவதரித்த இந்த ஸ்வாமிக்கு ஒருவிதமான குறைவுமில்லாமல் எழுந்தருளியிருந்தார். வித்யை, ஸம்பத், ஸந்தானம் இவைகளில் ஒரு குறைவுமிருக்கவில்லை. இந்த ஸ்வாமி சில வருஷங்களாக ஸ்ரீமதழகியசிங்கர் ஸந்நிதியில் ஸஞ்சாரத்திலேயே எழுந்தருளியிருக்கும்படியான பாக்யத்தையும் பெற்றிருந்தார்.

நமது ஸம்ப்ரதாயத்தில் தேர்ச்சி பெற்ற மஹான்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டு வரும் இந்நாளில் இம்மஹானின் மறைவு நமக்கு ஓர் அதிர்ச்சியைக் கொடுக்கிறது.

இந்த ஸ்வாமிக்கு சதாபிஷேகம் வெகு விமரிசையாக நடக்கவிருந்தது. அதற்கான ஸம்விதானங்களைச் செய்தும் வந்தார்கள் பலர். ஸரியாக அந்த ஸமயத்திலேயே இம்மஹான் மறைந்தார் என்பது மிகவும் வருந்தத் தக்கதே.

சிலவருஷங்களாக ஸ்ரீமதழகியசிங்கரின் ஸஞ்சாரத்திலேயே எழுந்தருளியிருந்த இந்த ஸ்வாமி கடைசி நாளில் தன் திருக்குமாரரிடமே எழுந்தருளியிருந்து பரமபதித்தார் என்பது அந்த ஸ்வாமி குடும்பத்தினரின் பாக்ய விசேஷமேதான். ஆனால் நமது தௌர்பாக்யம்தான்.

இந்தஸ்வாமி நமது ஸமூஹத்திலிருந்து மறைந்தார் என்றாலும் ஸ்ரீந்ருஸிம்ஹனிடம் நித்யகைங்கர்யம் செய்ய எழுந்தருளியிருக்கும் இந்தஸ்வாமியின் ஆத்மாசாந்தியடையும் என்பதுடன் நாம் சாந்தியடையவேண்டியது தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை.

ஸ்ரீ:

ஸ்ரீ நிமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(15-வது ஸம்- 12-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

अतिपृथुलबहुविटपिगिरिधरणिविवरयुगपदुदयविवृतचित्रपुङ्खवैचित्र्य!

அதிப்ருதுலபஹுவிடபிகிரிதரணிவிவரயுகபதுதயவிவ்ருதசித்ர புங்கவைசித்ர்ய!

அதிப்ருதுல - மிக்க உயர்ந்தும் பருத்துமுள்ள, பஹுவிடபி - அநேக மரங்கள், ஏழு ஸாலவ்ருக்ஷங்கள் என்றபடி. கிரி- அவற்றினருகிலுள்ள மலை, தரணி- பூமி ஆகிய இவற்றின், விவர- துளைகளின், யுகபதுதய- ஒரே காலத்திய உற்பத்தியால், விவ்ருத- ப்ரகாசம் செய்யப்பட்ட, சித்ரபுங்க- பாணத்தின், வைசித்ர்ய- விசித்ர சக்தியையுடைய ஸ்ரீ ராமபத்ர!

(கருத்து) ஸுக்ரீவன் ஏழு ஸாலமரங்களுள் ஏதாவது ஒரு ஸாலமரத்தை ப்ராணப்ரயோகத்தினால் துளையிடவேண்டுமென ஸ்ரீ ராமபத்ரனை வேண்டினான். ஸ்ரீ ராமபத்ரனும் வில்லெடுத்து நாணேற்றம் செய்து நாணோசையை திசைகளில் பரப்பி, ஒரே பாணத்தையெறிந்து ஏழு ஸாலமரங்களையும், அவற்றினருகிலுள்ள மலையையும் பூமியையும் துளைபடச் செய்தான். இதைக்கண்ட ஸுக்ரீவன் பெரும் வியப்புற்றான். என்னே ஸ்ரீ ராமபத்ரனின் பாணமஹிமை! ஒரு ஸாலமரத்தைத் துளையிட நான் விரும்பினேன். இப்பாணமோ நொடிப்பொழுதில் கிளம்பி ஏழு மரங்களுடன் மலையையும் பூமியையும் துளைத்துவிட்டுத் திரும்பவும் பழுதில்லாமல் அம்புறாத்தூணியை அடைந்துளது என்று. வாலியைக் கொல்வதற்குரிய தேஹபலமும் அஸ்த்ரபலமும் ஸ்ரீ ராமபத்ரனுக்கு உண்டோ என்று ஸுக்ரீவன் சங்கை கொள்ள, அதைப் போக்கக்கருதிய ஸ்ரீ ராமபத்ரன் முறையே, துந்துபி எலும்புக்கூட்டத்தை எறிந்தும், பாணத்தினால் ஸாலவ்ருக்ஷாதிகளைத் துளையிட்டும் ஸுக்ரீவனுக்குத் தன் தேஹபலத்திலும் அஸ்த்ரபலத்திலும் பூர்ணவிச்வாஸத்தை யுண்டுபண்ணினான் என்று சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். துந்துபிசரீரத்தை யெறிந்தபிறகும் பாணத்தினால் ஸாலவ்ருக்ஷத்தைத் துளையிடும்படி ப்ரார்த்திக்கும் ஸுக்ரீவன் ஒரு ஸாலவ்ருக்ஷத்தை பாணங்கொண்டு தேவரீர் துளையிட்ட மாத்திரத்தில் தங்கள் பலத்தில் எனக்கு நம்பிக்கை ஏற்படுமென்று கூறுவதாக உள்ள ஸ்ரீராமாயணச்லோகபாகம் இதற்குத் தக்க சான்றாக இவர்கள் கூறுகின்றனர். ஆயினும் இடக்கால் கட்டைவிரலால் ஸ்ரீ ராமபத்ரன் துந்துபி எலும்புக்குவியலை பத்து யோஜனைதூரம் எறிந்ததாலேயே ஸுக்ரீவன் ஸர்வஸந்தேஹமும் நீங்கப்பெற்றான் என்பது நம் ஸ்வாமி தேசிகனின் திருவுள்ளம். ஆகையால் தான் நம் ஸ்வாமி பூர்வசூர்ணிகையில் 'விச்வஸ்தஸுஹ்ருத' என்று ஸாதித்துள்ளார். களிப்பதற்காகவே ஸாலவ்ருக்ஷபேதனம் செய்ய வேண்டுகின்றேனே தவிர ஸந்தேஹநிவ்ருத்திக்காகவன்று என்று பொருள்பட ஸுக்ரீவன் கூறும் ஸ்ரீராமாயணத்திலுள்ள 'இமம் ஹி ஸாலம் ஸஹிதஸ் த்வயா ஶரோ ந ஸம்ஶயோத்ராஸ்தி விதாரயிஷ்யதி | அலம் விமர்ஶேந மம ப்ரியம் த்ருவம் குருஷ்வ ராஜாத்மஜ ஶாபிதோ மயா' என்ற ச்லோகமே நம் ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திக்குத் தக்க ப்ரமாணமாகும். ஹே ராஜகுமார! தாங்கள் ப்ரயோகிக்கும் பாணம் ஸாலவ்ருக்ஷத்தைத் துளையிட்டுவிடுமென்பதில் எனக்கு ஸந்தேஹமில்லை. என்மேலாணை

யாகச் சொல்லுகின்றேன். என் மகிழ்ச்சிக்காக எனக்கு ப்ரியமான இச் சாலவ்ருக்ஷபேதனத்தைச் செய்வீராக என்பது இதன் பொருள். உலர்ந்த துந்துபி சரீரத்தை எறிந்ததால் தனக்கு பலத்தில் த்ருப்தி உண்டாகவில்லையென ஸுக்ரீவன் கூறியதற்குக் காரணம் ஸ்ரீ ராமாஸ்த்ரஸாமர்த்யத்தைக் காண விருப்பம் கொண்டதேயல்லது சோதிப்பதற்காகவன்று.

विपुलभुजशैलमूलनिबिडनिपीडितरावणरणरणकजनकचतुरुदधिविहरणचतुरकपिकुलपति हृदयविशालशिलातलदारणदारुणशिलीमुख!

விபுலபுஜஶைலமூல நிபிட நிபீடிதராவணரணரணகஜநகசது-
-ருததிவிஹரணசதுரகபிகுலபதிஹ்ருதயவிஶாலசிலாதலதாதாரணருண
சிலீமுக!

விபுல- விசாலமான, புஜசைல- மலைபோன்ற புஜத்தின், மூல- கீழ்ப்புரமான கக்ஷத்தில், நிபிட- நெருக்கமாக, நிபீடித- (அழுத்தியதால்) ஹிம்ஸிக்கப்பட்ட, ராவண- ராக்ஷஸேச்வரனுக்கு, ரணரணகஜநக- பயம் கலந்த அதிர்ச்சியைச் செய்கின்ற, சதுருததி விஹரண- நான்கு ஸமுத்ரங்களில் விளையாட்டில், சதுர- ஸமர்த்தனான, கபிகுலபதி- வானரக்கூட்டங்களின் அதிபதியான வாலியினுடைய, ஹ்ருதய- மார்பாகிற, விசாலசிலாதல- அகன்ற சிலாப்ரதேசத்தை, தாரண- பேதம் செய்வதில், தாருண- க்ரூரமான, சிலீமுக- பாணத்தை உடைய ஸ்ரீ ராமபத்ர!

இங்கு கவனிக்கவேண்டிய ஸ்ரீராமாயண கதை வருமாறு:- பகவான் ஸப்தஸால வ்ருக்ஷபேதநம் மூலமாகத் தன் பாணப்ரயோகஸாமர்த்யத்தை வெளியிட்டார். இதைக் கண்டு பெரும் வியப்படைந்த ஸுக்ரீவராஜன் மெத்த மகிழ்ச்சியுடன் ஸ்ரீ ராமபத்ரனைக் கொண்டாடி அண்ணனுருக்கொண்ட தன் ஜந்மவைரியான வாலியை அப்போதே கொல்லும் படி கைகூப்பி வேண்டிக்கொண்டான். ஸுக்ரீவனைத் தழுவிக்கொண்டு மஹாமேதாவியான பகவான் சொல்லுகின்றார்:- 'ஸுக்ரீவ! நாம் யாவரும் இங்கிருந்து கிஷ்கிந்தைக்கருகில் செல்வோம். நீ வேகமாக முன் சென்று உன் விரோதியான வாலியைப் போர் செய்ய அழைத்து வா' என்று. உடனே மூவரும் கிஷ்கிந்தைக்கருகிலுள்ள காட்டுக்கு வேகமாகச் சென்றனர். அங்கு மரங்களின் மத்தியில் தங்களை மறைத்துக்கொண்டனர். ஸுக்ரீவன் வானமே பிளந்து விடுமோ என்று எண்ணும்படி பேரோசை எழுப்பி வாலியை யுத்தத்திற் கழைத்தான். இதைக் கேட்டதும் பலசாலியான வாலி கடுங்கோபத்துடன் கிஷ்கிந்தையிலிருந்து கிளம்பி வந்தான். பிறகு வாலிக்கும் ஸுக்ரீவனுக்கும் பயங்கரமான போர் மூண்டது. ஒருவர்க்கொருவர் முஷ்டிகளாலும் உள்ளங்கைகளாலும் அடித்துக்கொண்டனர். கையில் வில்லேந்திய ஸ்ரீ ராமபத்ரன் அச்வினீகுமாரர்களைப் போல ஒரே விதமான உயரம், தோற்றம், நிறம் ஆகியவை பொருந்திய வாலிஸுக்ரீவர்களைக் கண்டதும் யார் வாலி, யார் ஸுக்ரீவன் என்று அறியமாட்டாது திகைத்தான். ஆகையால் வாலியைக் கொல்வதற்காக பாணப்ரயோகம் செய்யவில்லை. இந்த ஸமயத்தில் ஸுக்ரீவன் வாலியினால் மிகவும் அடிக்கப்பட்டுத் தளர்ச்சியுற்றவனாய் உடலெல்லாம் குருதி பாய வேகமாக ஓடி ருச்யமூகமலைக் காட்டிற்குள் நுழைந்தான். யுத்தகாலத்தில் தனக்கு ஸ்ரீ ராமன் உதவி செய்யவில்லையே என்று மிகவும் வருந்தினான். ஸுக்ரீவனைத் தொடர்ந்து துரத்தி வந்த வாலி ருச்யமூகமலை

யருகில் வந்தவாறே மதங்கமுனிவரின் சாபத்தை எண்ணியவனாய் உன் அத்ருஷ்டத்தினால் விடுபட்டாய் என்று ஸுக்ரீவனைக் கோபத்துடன் சொல்லிவிட்டுத் திரும்பி கிஷ்கிந்தை சென்று விட்டான். ஸுக்ரீவன் திரும்பி வந்த காட்டுக்கு ஸ்ரீ ராமபத்ரன் இளையபெருமாளுடனும் ஹநுமானுடனும் வந்து சேர்ந்தார். ஸ்ரீ ராமபத்ரனைக் கண்டதும் ஸுக்ரீவன் வெட்கத்தினால் தரையைப் பார்த்துக்கொண்டே தீனஸ்வரத்துடன் கேட்கின்றான்:- ஹே ராகவ! வாலியை நான் கொல்லமாட்டேன் என்கிற நீர் முன்பே சொல்லியிருந்தால் நான் இங்கிருந்து போருக்காகக் கிளம்பியிருக்கமாட்டேன். வாலியைச் சண்டைசெய்ய அழைத்து வா என எனக்குச் சொல்லிவிட்டுப் போரில் உமது விக்ரமத்தைக் காட்டாதிருந்து வாலியினால் எனக்குப் பெரும் ஹிம்ஸையைச் செய்வித்தீரே! எந்த எண்ணத்தினால் இப்படி நடந்து கொண்டீர்? என்று. இதைக்கேட்ட ஸ்ரீ ராமபத்ரன் கூறுகின்றார்:- ஸுக்ரீவ! கோபத்தை விடுத்துக் கேள். நான் பாணம் ப்ரயோகிக்காத காரணம் விளங்கும். அலங்காரம், தோற்றம், ப்ரமாணம் (உயரம். பருமன்) நடை இவற்றினால் நீங்களிருவரும் ஒத்திருக்கிறீர்கள். மேலும், குரல், பார்வை, காந்தி, போரிடும் திறன் இவைகளும் ஒரேமாதிரியாயிருந்தன. உங்களிடமுள்ள இவ்வொற்றுமை காரணமாகவே நான் திகைத்துப்போய் பாணப்ரயோகம் செய்யாது இருந்து விட்டேன். உன்னையே வாலியாக எண்ணி நான் பாணப்ரயோகம் செய்திருந்தால் எனக்குப் பெரும் கெடுதியும் மஹாபாதகமும் நேர்ந்திருக்கும் அல்லவா? அபயம் யாருக்களிக்கப்பட்டதோ, அவனைக் கொல்வது மஹாபாபத்துள்ளடங்கும். மேலும் இக்காட்டில் எங்களுக்குப் பெருந்துணையாயிருப்பவன் நீயே. ஆகையால் யார் வாலி என்றறியாமல் பாணம் விடுவது தகாது என்று எண்ணி வாளாவிருந்தேன். ஆகையால் ஸுக்ரீவ! வேறு விதமாக என்னை எண்ணாதே. இப்பொழுதே சென்று மறுபடி வாலியை யுத்தத்திற்கு அழைத்து ஒரே பாணத்தினால் அவனைவீழ்த்தித் தரையில் புரளச் செய்கிறேன். இந்த நாகபுஷ்பக்கொடியைக் கழுத்திலடையாளமாகக் கொண்டு போருக்குச் செல் என்று. ஸ்ரீ ராமபத்ரனின் கட்டளையினால் இளையபெருமாள் மலைப்புரத்தில் பூத்துக் குலுங்கும் நாகபுஷ்பக்கொடியால் ஸுக்ரீவன் கழுத்தை அலங்கரிக்கிறார். உடனே கிஷ்கிந்தைக்கு ஸுக்ரீவன் செல்கின்றான். ஸூர்யன் போல் ஜ்வலிக்கும் பாணங்களையும் வில்லையுமெடுத்துக்கொண்டு அவன் பின்னால் ஸ்ரீ ராமபத்ரன் செல்கின்றார். பகவானுக்குப் பின்புறமாக ஹநுமான், நளன், நீலன், தாரன் என்ற வானரவீரர்கள் செல்கின்றனர். ஸுக்ரீவனுக்குப் பின்னாலும் ஸ்ரீ ராமபத்ரனுக்கு முன்னாலும் இளையபெருமாள் செல்கின்றார். இவர்கள் பல மலைகளையும் மரங்களையும் நதிகளையும் கண்டு களித்துக்கொண்டே வேகமாகச் செல்கின்றனர். கிஷ்கிந்தையருகில் சென்றதும் ஸுக்ரீவன், ‘ராகவ! கிஷ்கிந்தைக்கருகில் நாம் வந்துவிட்டோம். இப்போது வாலி யுத்தத்திற்காக வருவான். தேவரீர் எனக்காகச் செய்த ப்ரதிஜ்ஞையை வாலிவதத்தினால் ஸபலமாக்கவேண்டும்’ என வேண்டிக்கொண்டான். பகவான் சொல்கின்றார்:- லக்ஷ்மணன் அணிவித்த நாகபுஷ்பக்கொடிமாலை உன் கழுத்தில் விசேஷமாக விளங்குவதால் நான் வாலியையறிந்து ஒரே பாணத்தினால் கொல்லுகின்றேன். வாலியைப் போருக்காக மறுபடியும் உரத்த குரலில் கூப்பிடு. நான் அவனைக் கண்டவுடன் பாணப்ரயோகம் செய்து த்ரையில் புரளச்செய்வேன். என் கண்களில் தென்படும் அவன்

உயிருடன் திரும்பிப்போனுல் என்னை நீ தூற்றலாம். ஒரே பாணத்தினுல் ஸப்தஸால வ்ருக்ஷங்களையும் துளை செய்த என் திறமையை நீ கண்டிருப்பதால் நான் வாலியைக் கொல்லுவேன் என்பதை உறுதியாக நம்பு. என் வார்த்தை முன்பும் பொய்த்ததில்லை; என்றும் பொய்க்காது. ஆகையால் நான் செய்த ப்ரதிஜ்ஞையை ஸபலமாக்குகின்றேன். ஸுக்ரீவ! நீ பேரிரைச்சலிட்டு வாலியை வரவழை' என்று. உடனே ஸுக்ரீவன் மஹாநாதம் செய்தான். அந்தப்புரத்தில் உல்லாஸமாயிருந்த வாலியின் செவிகளில் இப் பேரோசை கேட்டது. கடுங்கோபத்துடன் யுத்தம் செய்ய வாலி புறப்பட்டான். வாலியின் ப்ரியையான தாரையென்பவள் வாலியை யணைத்தபடியே 'விடிந்தவாறே போரிடச் செல்லலாம். இப்பொழுது இரவில் போர் தொடுக்கவேண்டாம். ஸமீபகாலத்தில் தங்களுடன் போர் செய்து தங்களால் விரட்டியடிக்கப்பட்டு ஓடிப்போன ஸுக்ரீவன் உடனே திரும்பி வந்து போரிட அழைப்பதால், பெருந்துணையுடன் வருகின்றுனே என்று ஸந்தேஹிக்கின்றேன். மேலும் அயோத்யாதிபயின் திருக்குமாரர்களான ராமலக்ஷ்மணர்களுடன் ஸுக்ரீவன் நட்பு கொண்டிருக்கின்றுன் என்பதை நமது அங்கதன் மூலமாக அறிந்திருக்கின்றேன். ராமனே ப்ரளயகாலாக்நிபோல எதிரிகளையழிக்கும் திறம் பெற்றவன். ஆகையால் ஸ்ரீ ராமனேடு பகை யுண்டாகாமலிருப்பதற்காக ஸுக்ரீவனை யுவ ராஜாவாக ஏற்றுக்கொள்ளும். ஸ்ரீ ராமபத்ரனிடம் நட்பையும் ஸுக்ரீவனிடம் விரோத பாவமில்லாத அன்பையும் தாங்கள் செலுத்துவதுதான் உசிதமென நினைக்கிறேன் உமது தம்பி எங்கிருந்தாலும் அவனை ஆதரிப்பது தான் உமது கடமையாகும். ஆகையால் யுத்தம் செய்யச் செல்லவேண்டாம்' என ப்ரார்த்தித்துக்கொண்டாள். இதைக்கேட்ட வாலி சொல்லுகின்றுன்:— 'என் உடன்பிறந்தானுய் விசேஷமாக எதிரியாயிருப்பவன் போருக்கு வா என்று கர்ஜிக்கும்போது வீரனுன நான் எப்படிப் புறப்படாதிருக்க முடியும்? யுத்த களத்தில் புறமுதுகு காட்டாது தோல்வியே காணுத வீரர்கள் எதிரிகளின் கர்ஜனையை ஸஹிப்பது மரணத்துக்கும் மேம்பட்டதென நினைக்கிறுர்கள். ஆகையால் ஸுக்ரீவனின் கர்ஜனையை நான் ஸஹிக்கமாட்டேன். அவனுக்கு ஸஹாயமாயிருக்கும் ஸ்ரீ ராமபத்ரன் தர்மமறிந்தவனுகையால் தன்னிடம் அபராதப்படாத என்னைக் கொல்லமாட்டான். ஆகையால் அந்த ஸஹாயம் மூலமாக என்ன நேருமோ என வருந்த வேண்டாம். தாராதேவி! உன்னுடைய ஹிதோபதேசத்துக்காகவும் பதிபக்திக்காகவும் மிகவும் மகிழ்ந்தேன். நான் ஸுக்ரீவனிடம் போரிட்டு அவன் மதத்தை யழித்து வருவேன். நீ மற்ற ஸ்த்ரீகளுடன் அந்தப்புரம் செல்வாய். என் உயிர்மேலாணையாகச் சொல்லுகிறேன். நீ திரும்பிப் போ; நான் ஜயத்துடன் திரும்பி வருவேன்' என்று. உடனே வாலியைத் தழுவி விட்டு அவன் விஜயம் பெற ஸ்வஸ்திவாசனங்களைச் சொல்லிவிட்டு, அவனை வலம் செய்து விட்டுத் தாரா தேவி ஸ்த்ரீகளுடன் அந்தப்புரம் சென்றுவிட்டாள். வாலி வேகமாகக் கிளம்பி யுத்தகளம் சென்று ஸுக்ரீவனுடன் போர் செய்கின்றுன். ஸுக்ரீவனுக்கும் வாலிக்கும் கடுமையான முஷ்டிச்சண்டை மூள்கிறது. சண்டையில் பலம் குன்றி நாற்புறமும் பார்வை செலுத்தும் ஸுக்ரீவனை ஸ்ரீ ராமபத்ரன் காண்கிறுர். ஸுக்ரீவனின் துயரையறிந்ததும் வில்லில் அம்பைத் தொடுத்து வாலியைக் குறி வைத்து எறிகின்றுன். வேகமாகக் கிளம்பிய அந்த பாணம் வாலியின் விசாலமான மார்புக்குள் நுழைகின்றது. (தொடரும்)

ஸ்ரீ:

நூற்றெட்டுத் திருப்பதிகள்

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆழ்வார்கள் மிக முக்கியமானவர்கள். அவர்கள் வேதத்தை விரித்துரைத்த புனிதர்கள். அவர்களால் மங்களாசாஸனம் பண்ணப்பட்ட எம்பெருமான்கள் நூற்றெட்டு பேர்கள். அவர்கள் கோயில் கொண்டிருக்கும் தலத்திற்குத் திருப்பதி என்று பெயர். சோழநாட்டிலும், பாண்டியநாட்டிலும், மலைநாட்டிலும், நடுநாட்டிலும், தொண்டை மண்டலத்திலும், வடநாட்டிலுமாக இத்திருப்பதிகள் பாரததேசம் பூராவிலும் உள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் எத்தெத்தனை திவ்யதேசங்கள் இருக்கின்றன என்பதை ஸ்ரீ பிள்ளை பெருமாள் ஐயங்கார்

ஈரிருபதாம்(40) சோழம்ஈரொன்பதாம்(18) பாண்டி
ஓர் பதின்மூன்றும் (13) மலைநாடு ஓரிரண்டாம் (2) சீர் நாடு
ஆறோடீரெட்டுத் (22) தொண்டை அவ் வடநாடாறிரண்டு (12)
கூறு திருநாடொன்றாக் (1) கொள்.'

இப்பாசுரத்தால் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். ஒரு திவ்யதேசம் பரமபதத்தில் உள்ளது. அத்திவ்யதேசம் ப்ராக்ருதமான இச்சரீரத்தோடு போய் ஸேவிக்கக் கூடியதன்று. மற்றுள்ள திவ்யதேசங்களில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான்களின் திருநாமங்களும், மற்றுமுள்ள விசேஷங்களும் நமது ப்ரியாபிமானிகளின் ஸௌகர்யத்தின் பொருட்டு இதில் ப்ரசுரிக்கின்றோம்.

சோழநாட்டுத் திருப்பதிகள்-20

1. ஸ்ரீரங்கம்:— ஸ்ரீரங்கநாதன் - சயனம்- தெற்கே திருமுகமண்டலம். ஸ்ரீரங்கநாச்சியார். ப்ரணவாக்ருதி விமானம். வேத ச்ருங்கம். காவேரீ நதி. தர்மவர்மாவிற்கும், ரவி தர்மனுக்கும் ப்ரத்யக்ஷம். ஸ்ரீரங்கம் ரயில் ஸ்டேஷன். எல்லா ஆழ்வார்களும் மங்களாசாஸனம் பண்ணி பாடியிருக்கின்றார்கள்.

பெரியாழ்வார்:— 'கருவுடை மேகங்கள்' 'சீமாலி கனவனோடு' 'வண்டுகளித்திரைக்கும்' 'கன்னி நன்மா' மாதவத்தோன் (10) மாவடியை (11) துப்புடையாரை (10

ஆண்டாள்:— தாமுகக்கும் (10)

குலசேகராழ்வார்:— இருளிய (10) தேட்டரும் (10) மெய்யில் (9) 'தேவரையும்.'

திருமழிசையாழ்வார்:— 'கொண்டை கொண்ட' 'மன்னு மாமலர்' 'பாலில் கிடந்து' 'அவனென்னை' 'நாகத்தணை' 'ஆள் பார்த்து.'

தொண்டரடிப்பொடியாழ்வார்:— காவலில் (45) கதிரவன் (10)

திருப்பாணாழ்வார்:— அமலனாதிபிரான் (10)

திருமங்கையாழ்வார்:— 'பள்ளியாவது' 'உந்திமேல் (10) வெருவாதாள்(10) கைம்மானம்(10) பண்டை (10) ஏழை ஏதலன் (10) 'உரங்களால்' 'தாங்கரீர்' 'புனைவளர்' 'கண்ணன்' 'அணியார்' 'இம்மையை' 'ஆவியை' 'இரும்பு' 'மண்டியார்' 'பட்டுடுக்கும்' 'நெஞ்சுருகி' 'முளைக்கதிரை' 'கார்வண்ணம்' 'முற்றா' 'நைவளமொன்' 'உள்ளூரும்' 'இருகையில்' 'மின்னிலங்கு' 'ஆரமம் சூழ்ந்த' 'மன்னு மாங்கத்து'.

பொய்கையாழ்வார்:— 'ஒன்றுமறந்தறியேன்'

பூதத்தாழ்வார்:— 'மனத்துள்ளான்' 'பயின்றதரங்கம்' 'தமருள்ளம்'.

பேயாழ்வார்:— விண்ணகரம்.

நம்மாழ்வார்:— 'தண்ணந்துழாய்' கங்குலும் (11).

2. உறையூர்—நிசுளாபுரி. அழகிய மணவாளன்— நின்ற திருக்கோலம்— வடக்கே திருமுக மண்டலம்— வாஸலக்ஷ்மி- உறையூர் வல்லி- கல்யாண விமானம்— குடமுருட்டி நதி— முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும், ரவிதர்ம ராஜாவுக்கும் ப்ரத்யக்ஷம்.

திருமங்கையாழ்வார்:— 'கோழியும் கூடலும்'. ரயில்வேஸ்டேஷன், திருச்சிக் கோட்டைக்கு மேற்கே ஒரு மைல்.

3. தஞ்சை மாமணிக்கோயில்:- நீலமேகப் பெருமாள். வீற்றிருந்த திருக்கோலம்- கிழக்கே திருமுகமண்டலம்-செங்கமலவல்லி-ஸௌந்தர்ய விமானம்- கன்னிகா புஷ்கரணி- அம்ருத தீர்த்தம்- பராசர முனிக்கு ப்ரத்யக்ஷம்.

திருமங்கையாழ்வார்:- 'எம்பிரானெந்தை' 'உடம்புருவில்'.

பூதத்தாழ்வார்:- 'தமருள்ளம் தஞ்சை' ஸ்டேஷன் தஞ்சாவூர். அங்கிருந்து வடக்கே 3-மைல். இவ்விடத்திற்கு வெண்ணாற்றங் கரை என்று பெயர். நீலமேகப் பெருமாள் ஸந்நிதியினருகில் மணிக்குன்னப் பெருமாள் ஸந்நிதியிருக்கின்றது. மணிக்குன்னப் பெருமாள்- அம்புஜவல்லித் தாயார். மணிக்கூட விமானம். மார்க்கண்டேயருக்கு ப்ரத்யக்ஷம்.

தஞ்சை யாளிநகர்

ந்ருஸிம்ஹன்- கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம்- தஞ்சை நாயகி. வேதசுந்தர விமானம்- ஸூர்ய புஷ்கரணி- ஸ்ரீ ராமதீர்த்தம்- மார்க்கண்டேயருக்கு ப்ரத்யக்ஷம்.

4. திருவன்பில்;- திருவடிவழகிய நம்பி. நின்ற திருக்கோலம்- கிழக்கே திருமுகமண்டலம். அழகியவல்லி நாச்சியார்- தாரக விமானம்- மண்டூக புஷ்கரணி- ப்ரஹ்மாவிற்கும் வால்மீகிக்கும் ப்ரத்யக்ஷம்.

திருமழிசையாழ்வார்.- 'நாகத்தணை, ரயில் வேஸ்டேஷன் பூதலூர். அவ்விடத்திலிருந்து வடக்கே 8- மைல்.

5. திருக்கரம்பனூர்—உத்தமர்கோயில்:— புருஷோத்தமன்- கிழக்கே திருமுகமண்டலம்- புஜங்கசயனம்- பூர்வாதேவி- உத்யோக விமானம்- கதம்ப மஹரிஷிக்கும், திருமங்கையாழ்வாருக்கும், உபரிசரவஸ‾க்கும், ஸநகஸநந்தன ஸநத்குமாராதிகளுக்கும் ப்ரத்யக்ஷம்.

திருமங்கையாழ்வார்:-'பேரானைக்குடந்தை.' ஸ்டேஷன் உத்தமர்கோயில்.

6. திருவெள்ளறை:—புண்டரீகாக்ஷன் நின்ற திருக்கோலம்- கிழக்கே திருமுகமண்டலம்- பங்கயச்செல்வி- செண்பகவல்லி- விமலாக்ருதி விமானம்- குஶ தீர்த்தம், மணிகர்ணிக தீர்த்தம், சக்ர தீர்த்தம், திவ்யபுஷ்கரணி, புஷ்கல தீர்த்தம், பத்ம தீர்த்தம், க்ஷீரபுஷ்கரணீ, கந்தபுஷ்கரணி, வராஹ தீர்த்தம்-ஸ்மேவதகிரி- பெரிய திருவடி, சிபி சக்ரவர்த்தி, பூதேவி, மார்க்கண்டேயர் இவர்களுக்கு ப்ரத்யக்ஷம்.

பெரியாழ்வார்:- 'உன்னையும்' இந்திரனோடு (10)

திருமங்கையாழவார்:— வென்றிமா (10) 'துளக்கமில்' .போமருதிருத்தான்' 'பின்னையிருசுடரை' (ஸ்டேஷன்) திருச்சிக் கோட்டையிலிருந்து வடக்கே 14- மைல்.

7. புள்ளபூதங்குடி:- வல்விலிராமன், புஜங்க சயனம்- கிழக்கே திருமுகமண்டலம்- பொற்றாமரையாள்- சோபன விமானம்- க்ருத்ர தீர்த்தம்—சக்ரவர்த்தித்திருமகனுக்கும், க்ருத்ர ராஜனுக்கும் ப்ரத்யக்ஷம். க்ருத்ரராஜனுக்கு மோக்ஷம்தந்த இடம்.

திருமங்கையாழ்வார்:-அறிவதரியான் (10) சுவாமிமலை ஸ்டேஷனிலிருந்து வடமேற்கு $2\frac{1}{2}$ மைல்.

8திருப்பேர் நகர்—கோவிலடி:- அப்பக்குடத்தான்- புஜங்கசயனம்- மேற்கே திருமுகமண்டலம்- வலது ஹஸ்ததின் கீழ் குடம்- கமலவல்லித் தாயார்- இந்திர விமானம்- இந்திரகிரி- உபமனுவுக்கும், பராசருக்கும் ப்ரத்யக்ஷம்.

பெரியாழ்வார்.— கொங்கும்-கொண்டல்'

திருமங்கையாழ்வார்:— கையிலங்கு (10) 'பிண்டியார், 'நீரகத்தாய், 'மதிள்கச்சி,

திருமழிசையாழ்வார்:— 'நாகத்தணை,

நம்மாழ்வார்:— திருமாலிரும் (11) பூதலூர் ஸ்டேஷனிலிருந்து 6- மைல்.

9. திருஆதனூர்:— ஆண்டாளக்குமையன் புஜங்கசயனம்- கிழக்கே திருமுகமண்டலம்- ஸ்ரீரங்கநாயகி- ப்ரணவ விமானம்- ஸூர்யபுஷ்கரணி- காமதேனுக்கும், திருமங்கையாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம்- ஆழ்வார் விக்ரஹம் கர்ப க்ருஹத்தில் உள்ளது.

திருமங்கையாழ்வார்:- 'அன்னவனையாதனூர்' சுவாமிமலை ஸ்டேஷனிலிருந்து 2-மைல்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஆசாரம்

மனிதனுக்கு வ்யவஹாரத்தில் எது ஹிதமாகவும், உபகாரமாகவும், வேதஸம்மதமாகவும் இருக்கிறதோ அது ஸதாசாரமென்று சொல்லப்படுகிறது. எது வேதவிருத்தமாயும் ஸம்ஸாரத்திற்கு அஹிதமாயும் இருக்கிறதோ அது அநாசாரம்—துராசாரம் என்று சொல்லப்படுகிறது. வேதத்திற்கும் ஸ்ம்ருதிகளுக்கும் அனுகூலமான தர்மாசரணமே ஸதாசாரம். தர்மத்திற்கு உத்பத்திஸ்தானம் ஆசாரமென்று 'ஆசாரப்ரபவோ தர்ம:' என்கிற ப்ரமாணம் சொல்லுகிறது. மனிதன் பெரிய பண்டிதனாகவும் ஸாங்கவேதாத்யாயியாகவும் இருந்தாலும் ஆசாரப்ரஷ்டனாகில் அவனுடைய ஜ்ஞானம் வ்யர்த்தமே. இதையே மனு சொல்லுகிறார்:— 'ஆசாரஹீனம் ந புனந்தி வேதா: யத்யப்யதீதா: ஸஹ ஷட்பிரங்கை: । ஆசாரேண து ஸம்யுக்த: ஸம்பூர்ண ப²லபா⁴க்³ ப⁴வேத் ॥ ஆசாரஹீனஸ்ய து ப்³ராஹ்மணஸ்ய வேதா: ஷட³ங்கா³ அகி²லா: ஸயஜ்ஞா: । காம் ப்ரீதிமுத்பாத³யிதும் ஸமர்தா²: அந்த⁴ஸ்ய தா³ரா இவ த³ர்ஶனீயா: ॥' வேதவேதாங்கங்களை நன்கு கற்றவனான விப்ரன் ஆசாரப்ரஷ்டனாகில் அவன் வேதத்தினுடைய பயனை அடையமாட்டான். எவனொருவன் தன்னுடைய சரீரத்தை தர்மத்திற்கு அனுகூலமாக வைத்துக் கொள்வானோ அவன் எல்லாவிதத்திலும் ஸுகமாக இருப்பான். ஆசாரத்தினால் ஆயுஸ் வ்ருத்தி அடைகிறதென்றும் அபீஷ்டமான ஸந்தானம், தனம் முதலானவை ஏற்படுகிறதென்றும் மனு சொல்லுகிறார். ஆசாரத்தினால் ஸமஸ்தமான துர்குணங்களும் நீங்கி விடும். எந்த கார்யத்தினால் ஆத்மாவும் மனஸ்ஸும் ஸந்தோஷத்தை அடைகிறதோ அதுவும் தர்மமூலம். செய்யக்கூடாத கார்யத்தைச் செய்ததினால் ஒருவனுக்கு மனஸ் ஸந்தோஷம் ஏற்பட்டால் அது ஆத்மதுஷ்டி என்றுசொல்ல முடியாது. ஏனென்றால் எந்த கார்யம் செய்ததினால் தன்னுடைய ஆத்மாவில் பயமோ, சங்கையோ, லஜ்ஜையோ ஏற்படுகிறதில்லையோ அந்தந்த கர்மங்களை செய்வது உசிதம். ஒரு மனிதன் பொய் பேசுதல், திருடல், வ்யபிசாரம் முதலான செய்யத் தகாத கார்யங்களைச் செய்தானாகில் அப்பொழுது தன்னுடைய ஆத்மாவில் பயம், சங்கை, லஜ்ஜை முதலான பாவங்கள் ஏற்படுகின்றன. மனஸ்ஸு ஸத்புருஷனை அப்படி துராசாரங்களில் இறங்கவிடாமல் செய்கிறது. ஸத்புருஷனுக்கு தான் செய்யவேண்டிய கார்யங்களில் ஸந்தேஹம் ஏற்படுமாகில் அப்பொழுதுதான் தன்னுடைய ஆத்மப்ரவ்ருத்தியைப்பார்க்கிறான். நாம் எந்தக் கார்யம் செய்தால் நம் ஆத்மாவிற்குத் திருப்தி ஏற்படுமென்றாலோசித்து அதற்கனுகுணமாக கார்யங்களைச் செய்கிறான். இதையே 'ஸதாம் ஹி ஸந்தே³ஹபதே³ஷு வஸ்துஷு ப்ரமாணமந்த:கரணப்ரவ்ருத்தய:' என்று மஹாகவி சொல்லுகிறார். பகவான் பதஞ்ஜலியும் யோகசாஸ்திரத்தில் ஆசாரமென்பது மனஸ்ஸினுடைய ப்ரஸன்னரூபமென்று முன் எழுதியபடி சொல்லுகிறார். 'மைத்ரீ, கருணா, முதி³த, உபேக்ஷாணாம் ஸுக², து:³க², புண்ய, அபுண்ய, விஷயாணாம் பா⁴வநாதஶ்சித்தப்ரஸாத³நம்'. ஸுகமுடையவன், துக்கமுடையவன், புண்யசாலி, பாபிஷ்டன் இந்த நான்குவித புருஷர்களுடன் நாம் பழகி வர்த்திக்கும்போது க்ரமமாக ஸுகியாக இருப்பவனிடம் ஸ்நேஹம் செய்தல், துக்கமுள்ளவனிடம் கருணை செய்தல், புண்யசாலியிடம் அவனுடைய புண்யவிசேஷத்தை நினைத்து ஸந்தோஷித்தல், துராசாரமுள்ள பாபிஷ்டனிடம் உபேக்ஷையாக இருக்கை ஆவச்யகம். இப்படி இருந்தால்தான் மனதிற்கு ஒருவிதமான சாந்தி ஏற்படுகிறது. சொன்ன க்ரமத்திற்கு வ்யத்யஸ்தமாக வர்த்தித்தால் நம்முடைய மனதே நம்மை நிந்திக்கும். இது அனுபவ ஸித்தம். ஆகையால் துராசாரத்தை விட்டு விடவேண்டும். மற்றும் இதுவிஷயத்தில் மனு சொல்லுகிறார்:— 'து³ராசாரோ ஹி புருஷோ லோகே ப⁴வதி நிந்தி³த: । ஸததம் ஸ து:³க²பா⁴கீ³ வ்யாதி⁴தோ(அ)ல்பாயுரேவ ச ॥

துராசாரமுள்ள புருஷன் உலகில் நிந்திக்கப் படுகிறான். இவன் அநேகவிதமான துக்கங்களுக்கு பாத்ரமாகிறான். எப்பொழுதும் இவன் ரோகத்தினால் பீடிக்கப்பட்டவனாக இருந்து கடைசியில் அல்பாயுஸ்ஸாகவும் ஆகிவிடுவான். ஆர்யன் எவன் என்று ஓர் விசாரம் ஏற்பட்ட போது ஓர் ப்ரமாணம் இவ்வாறு கூறுகிறது. 'கர்தவ்யமாசரந்காம்யம் அகர்தவ்யமநாசரந் | திஷ்டதி ப்ரக்ருதாசாரே ஸவா ஆர்ய இதி ஸ்ம்ருதः ||' செய்யவேண்டியதை எவன் அவச்யம் செய்கிறானோ செய்யத் தகாததை எவன் செய்யமாட்டானோ தன்னுடைய ஸ்வாபாவிகமான ஆசாரத்திலேயே எவன் நிலையாக இருப்பானோ அவனே ஆர்யன் என்று சொல்லப் படுகிறான். விஹிதமான கர்மத்தை யதா சக்தி செய்வதும் நிஷித்தமான கர்மத்தை விடுவதும் ஆவச்யகம். 'ஆஜ்ஞாநாஜ்ஞாவ்யவஹேதந ப்ரியா வைகுண்டவல்லபः | ச்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா' என்று ச்ருதியும், ஸ்ம்ருதியும் தன்னுடைய ஆஜ்ஞை என்று பகவான் உத்கோஷிக்கிறான். இந்த என்னுடைய ஆஜ்ஞையை எவன் மீறி நடக்கிறானோ அவன் வைஷ்ணவனாகிலும் என்னுடைய பக்தனல்ல என்று சொல்லுகிறான். இவ்வித ஆஜ்ஞா கைங்கர்யம் ஸந்த்யாவந்தனம், (பொய் பேசாமலிருக்கை) ஸத்யத்தைப் பேசுதல் முதலானவை. ஆஜ்ஞா கைங்கர்யத்தைச் செய்யாவிடில் பாபம் ஸம்பவிக்கும். அனுஜ்ஞா கைங்கர்யமாவது, பகவான் கோவிலிலிருந்து வெளியில் புறப்பாடாக எழுந்தருளினால் அனுயாத்ரை செய்தல் அதாவது—பகவான் திரும்பி கோவிலுக்கு எழுந்தருளும் வரையில் தாம் பின் செல்லுதலும், கோபுரநிர்மாணாதி கைங்கர்யங்களும். இதைச் செய்யாவிட்டால் பாபம் ஸம்பவிக்காது. செய்தால் புண்யம் உண்டு. எந்த ஸஜ்ஜனனிடம் இம்மாதிரியான ஸதாசாரம் இருக்கிறதோ அவனையே 'ஸ ஹோதா ஸ ஸாத்யஹः' என்று கீதையில் கொண்டாடுகிறார். இப்படிப்பட்டவர்கள் விஷயமாகவே பர்த்ருஹரி பின்வருமாறு ஒருச்லோகம்சொல்லுகிறார். 'வாஞ்சா ஸஜ்ஜநஸங்கமே பரகுணே ப்ரீதிः குரௌ நம்ரதா வித்யாயாம் வ்யஸநம் ஸ்வ யோஷிதி ரதிः லோகாபவாதாத்பயம்... ஏதே யேஷு வஸந்தி நிர்மலகுணாஸ்தேப்யோ நரேப்யோ நமः' ஸஜ்ஜனங்களுடைய ஸங்கத்தில் சேரவேண்டுமென்கிற ஆசை, பிறருடைய நற்குணங்களைப் பார்த்து அஸூயையை விட்டு அந்த குணங்களைக் கண்டு ஸந்தோஷித்தல், அஜ்ஞானமாகிற இருட்டை வேருடன் அறுத்து நமக்கு ஐஹிகபலம் ஆமுஷ்மிகபலம் இவற்றைக் கொடுத்து நம்மை ஸம்ஸாரஸாகரத்திலிருந்து கரை ஏற்றுகிற குருவிடம் மிகவும் வணக்கம், வித்யையில் அபிருசி, தன்னுடைய பத்னியிடமே ப்ரீதியை வைத்தல், லோகாபவாதத்திற்கு பயப்படுவது, பகவானிடத்தில் பக்தி, இந்த்ரியங்களைக் கெட்ட வழிகளில் போகவிடாமல்திருத்தும்சக்தி, துஷ்டர்களிடம் ஸஹவாஸத்தை விடுதல் இந்த நற்குணங்கள் எந்தஸஜ்ஜனங்களிடம்இருக்கின்றனவோ அந்த மஹான்களுக்கு நமஸ்காரம் என்பது இதன் பொருள். 'சௌசாசாரவிஹீநஸ்ய ந ஸங்கம் விந்ததே க்வசித்.' சௌசமும் ஆசாரமும் இல்லாதவர்களுக்கு எவ்விடத்திலும் ஸங்கம் இல்லை என்று சொல்லப்படுகிறது. 'ஆசாரஹீநம் ந புநந்தி வேதா:' ஆசாரமற்றவனை வேதங்கள் பரிசுத்தம் செய்வதில்லை என்றும் ப்ரமாணம் சொல்லுகிறது. மனிதனுக்கு இந்த உலகில் ஆசாரமென்பதும் ஜ்ஞானமென்பதும் இறக்கைகள். எப்படி ஜ்ஞானமாகிற இறக்கை இல்லாவிடில் மனிதனாகிற பக்ஷி பறக்க முடியாதோ அவ்வாறே அனுஷ்டானம் என்கிற இறக்கை இல்லாவிடில் அப்பக்ஷி பறக்க முடியாது. ஒரே இறக்கையைக்கொண்டும் பறக்க முயன்றாலும் கொஞ்ச தூரம் சென்று கீழே விழுந்துவிடும். ஆகையால் ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர், சூத்திரர் இவர்கள் தங்கள் தங்களுடைய குலாசாரத்தையும் தேசாசாரத்தையும் விடாமல் அனுஷ்டித்து வரவேண்டும். ஆசாரமென்பது மனிதனுக்கு மிகவும் முக்யமானது. இது இன்னும் பல ச்ருதி ஸ்ம்ருதிகளில் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ:

ஓரொன்றுதானே (7)

ஆஸ்வாந்தஸ்வாந்தநியமநநந்யக³திபி⁴ர்மீநை: கியத்³ப்⁴ராந்தே
க்லேஶேநாபி கியத்³வ்யலங்கி⁴ ஸஹஸோத்தா²நைர்வேகை³: ப்லவகே³ந்த்³ரவீரை: ।
விஜ்ஞாதா கியதீ வாந்த: க்ஷிதிப்⁴ருதா மந்தே²ந மந்த³ரதா
கிந்தை: கேஶவபாது³காகு³ணமஹாம்போ⁴தே⁴ஸ்தடஸ்தா² வயம் ॥

ஸ்ரீமத்பாதுகாஸஹஸ்ரத்தில் 43-வது ச்லோகம் இது. மூன்றாவதான ப்ரபாவபத்ததியில் 13-வது ச்லோகமாகத் திகழுகிறது. இதன் பொருள் பின்வருமாறு:— ஜலத்திலேயே ஸஞ்சரித்தாகவேண்டிய மீன்களால் ஸமுத்ரத்தில் எவ்வளவு பாகம்தான் ஸஞ்சரிக்கப்பட்டதாகும் (முழுதும் ஸஞ்சரிக்கப்பட்டதாகாதென்றபடி). அப்படியே வெகு சிரமப்பட்டு மிக்க வேகசாலிகளான திருவடி முதலிய வானரமுதலிகள் கடலைத் தாண்டியதும் எங்கோ ஒரு கடலின் ஏகதேசத்தில்தானே. மத்தாக அமைந்த பர்வதமாம் மந்தரமலைதான் ஸமுத்திரத்தின் ஆழத்தைக் கண்டறிந்ததா? இந்த ஸாமாந்யமான கடலே இப்படி ஒருவராலும் இவ்வளவென்று அளவிடமுடியாத நிலையைக் கண்டு, கேசவனது திவ்ய பாதுகைகளின் குணக்கடலை லங்கனம் எவரால் அறியவொண்ணும்? என்ற எண்ணத்தால் நாம் அம் மஹாநதிக் கரையிலே நின்றுவிடுகிறோம்.

பாதுகைகளின் மஹிமைக்குத் தோற்று ஸ்வாமி அருளிச்செய்யும் பாசுரங்கள் பலவற்றில் இதுவொன்று. இந்த ச்லோகத்தின் அருமை பெருமைகளையும் அழகுகளையும் கணிசித்தால் இந்த ச்லோகாநுபவமாகிய பெருங் கடலருகுஞ் செல்ல இயலாது, கரையில் வெகு தூரத்திலே இருக்கப்ராப்தம். இருப்பினும் ஆசை வெட்கமறியாது என்ற கணக்கில்சற்றே அருகு சென்றுகரையோரமாக ஒதுக்கப்படும் அர்த்தவிசேஷங்களாகிய செம்பவள வெண்முத்தங்களைக் கண்டு மகிழ்வோம்.

ச்லோகத்தின் முதல் மூன்று பாதங்களால் ஸாமாந்யமான கடலையே ஒருவராலும் அளவுபடுத்த முடியாது என்று காட்டியருளுகிறார் கவி. கடலை மூன்று விதமாக அளவுபடுத்தலாம் விஞ்ஞான சாஸ்திரத்தின் (Scince)படி. (1) விஸ்தீர்ணம் அல்லது நீளத்தில் பரப்பு (2) அகலம் (3) ஆழம். இந்த ச்லோகத்தில் 2, 3 ஆகிய அகலத்தையும் ஆழத்தையும், 2, 3 பாதங்களால் குறிக்கொண்டு, முதல் பாதத்தால் நீளம், அகலம், ஆழம் மூன்றும் சேர்ந்து ஏற்படுத்தும் முப்பங்கின் அளவைத் (Cubic Content) திருவுள்ளம்பற்றுகிறார். மீன்கள் ஜலத்திலேயே ஆயுள் முழுதும் ஸஞ்சரித்தாகவேண்டியவை. ஜலத்தை விட்டகன்றால் உயிர் தரியா. 'ஜலாந்தஸ்ய ஏவ உஜ்ஜ்வலந்' என்று பழமொழியாயிற்றே. அதை 'அநந்யகதிபி:' என்ற சொல்லால் காட்டியருளுகிறார். அப்படி ஒரு க்ஷணமும் ஜலத்தை விட்டுப் பிரிய இயலாத மீன்கள் கூட ஸமுத்திரத்தின் முழு பாகத்திலும் அவ்வளவு நீரிலும் ஸஞ்சரிக்க முடியாதபடி அவ்வளவு விஸ்தாரமானது கடல் என்பது காட்டப்படுகிறது. வானரவீரர்கள் கடலைத் தாண்டினார்கள் என்றபோது ஏதோ ஒரு இடத்தில்,— இப் பாரதபூமிக்கும் இலங்கைக்கும் நடுவே— நூறு யோசனை என்று கணக்கிடப்பட்ட இடத்தில் தாண்டினார்கள். அந்த அகலத்தை அதிசயித்த அநேக பாகங்கள் கடலில் உண்டன்றோ? ஆகையால் வானரமுதலிகள் கடலைத் தாண்டிவிட்டார்கள் என்றபோது அது எவ்வளவு உண்மை? கடல் முழுதும் தாண்டப்படவேயில்லையென்றுதானே கொள்ள வேண்டும். அவ்வண்ணமே ஆழத்தை யார்தான் முழுதும் அளவிட்டார்? அன்று கடல் கடைந்தபோது மத்தாக உபயோகப்படுத்தப்பட்ட மந்தரமலை கடலின் முழு ஆழத்தைக் கண்டுவிட்டதாகச் சொல்ல முடியுமா? எப்

போது மத்தாக உபயோகப்படுத்தப்பட்டதோ, அப்போதே அது முழு ஆழத்தையும் கண்டறியவில்லையென்று விளங்கவில்லையா? மத்து தாழியில் கடைசி வரையில் சென்றுவிட்டால் கடைய இயலாது என்பது அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்தவர் கண்டறிந்த விஷயமல்லவா? தாழியின் அடிப்பாகத்தை ஸ்பர்சிக்காதவரையில்தான் கடைதல் ஸாத்யம். அல்லாதபோது தாழியின் அடிப்பாகம் தேயும், மண் பாத்திரமாயின் உடையும். மந்தரமலையை மத்தாக நாட்டியவன்று அது அமிழ்ந்துபோய்விட இருந்ததாகவும் அப்போது எம்பெருமான் ஆமையாக அடியிலிருந்து அதைத் தாங்கிய பிறகே கடைய இயன்றது என்றும் புராணங்கள் கூறுகின்றன. அது நிற்க, மத்தான மலை ஸமுத்திரத்தின் முழு ஆழத்தையும் கண்டு அடிப்பாகத்தைத் தொட்டிருந்தால் அந்த மதனத்தில் அம்ருதம் வந்திருக்க முடியாது. சேறும், மண்ணும்தான் வந்திருக்கும். ஆகவே எப்படிப் பார்த்தாலும் மந்தரபர்வதம் ஸமுத்திரத்தின் ஆழத்தைக் கண்டறியவில்லையென்றுதான் முடிவு கட்டவேண்டும். அதைத்தான் வெகு அழகாக மூன்றும் பாதத்தால் காட்டியருளுகிருர் ஸ்வாமி தேசிகன். 'ஶ்ருங்க' என்ற சொல் ஆழத்தை அது எப்படிக் காணும் என்று காட்டிக் கொடுக்கவே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

ஸ்வாமி தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகள் பெரும்பாலும் அவருக்கு முன் சென்ற கவிகளின் கூற்றுகளைக் குறிக்கொண்டு அவற்றை ஞாபகப்படுத்தும்படியும், அவற்றில் இருக்கும் தோஷங்களைக் களைந்து, அழகுபடப் பரிஷ்கரித்து அருளிச்செய்தபடியுமாகவே அமைந்திருப்பன. ஸ்வாமியினுடைய ஒரு ச்லோகத்திற்கோ, ஒரு பாசுரத்திற்கோ, ஒரு பங்க்திக்கோ முழுப் பொருளையும் நாம் உணரவேண்டுமானல் முற்காலத்தவரொருவரது எந்த வாக்கை நினைந்து அது அவதரித்தது என்று அறிதல் அவசியம். அந்த முறையில் இந்த ச்லோகத்திற்கு எந்த கவிக் கூற்று முற்பாடானது என்று ஆராய்ந்தால்

தேவீம் வாசமுபாஸதே ஹி பஹவ:
ஸாரந்து ஸாரஸ்வதம் ஜாநீதே நிதராம்
அஸௌ குருகுலக்லிஷ்டோ முராரி: கவி: |
அப்திர்லங்கித ஏவ வாநரபடை: கிந்த்வஸ்ய
கம்பீரதாம் ஆபாதாலநிமக்நபீவரதநு:
ஜாநாதி மந்தாசல: ||

என்றப்ரஸித்தச்லோகம் ஸ்வாமி திருவுள்ளத்தில் ஓடவும்தான் நாம் இங்கே அனுபவிக்கும் பாதுகா ஸஹஸ்ரச்லோகம் அவதரித்தது என்று சொல்வதற்கு என்ன ஸந்தேஹம்? அதே விருத்தம், சார்தூலவிக்ரீடிதம். அதே சொற்கள். அதே சொற்களை உபயோகப்படுத்தி அந்தக் கவி சொன்ன விஷயம் அஸங்கதம் என்று காட்டப்படுவதுதான் அழகு. 'அப்திர்லங்கித ஏவ வாநரபடை:' இதற்குப் பதில் 'ஸிந்தும் வ்யலங்கி ...... ப்லவங்கேச்வரை:'. 'அஸ்ய கம்பீரதாம் ஜாநாதி மந்தாசல:' வுக்குப் பதில் 'விஜ்ஞாதா கியதீ ...... கம்பீரதா'. அந்த மலையை 'மந்தாசல:' என்று சொல்லியும் பாதாளம் வரை அமிழ்ந்தது என்று பேசிய பேதமை தெளிவிக்கப்படுகிறது. பாற்கடலைக் கடைந்ததா, பாதாளத்தைப் பிளந்ததா என்று கேட்பது போலிருக்கிறது. ஸ்வாமியின் ச்லோகத்தில் 'புந:' என்ற சொல் வெகு ரஸம். ஜாநாதி என்று ஒருவன் சொல்லிவைத்தானே அந்த மலைதான் ஆழத்தை எங்ஙனமறிந்ததாகச் சொல்ல முடியும் என்று த்வனிக்கப்பாடியிருக்கிறபடி. உபமானத்தின் உண்மைகளை இல்லை செய்தபோது உபமேயத்தையும் அன்னமேயாகக் கருதவேண்டும். ஜாநாதி என்பதில்லையானல் ஜாநீதேயுமில்லைதானே? இதை வேறிடத்தில் காட்டியருளுகிருர். 'ஸாரந்து ஸாரஸ்வதம் ஜாநீதே......... முராரி: கவி:' என்பது ஸாரஸ்ஸாரஸ்வதாநாம் சடாரிபுணிதி: என்றவிடத்தில் கண்டிக்கப்படுகிறது. இரண்டும் சடாரிவிஷய ப்ரபந்தங்களே.

ஸப்த ஸாகரம் என்று வ்யவஹாரமுண்டே, அவற்றுள் மூன்று ஸாகரங்களை மூன்று பாதங்களால் நிர்தேசித்திருப்பது விளங்குகிறது. அம்புநிதி, அம்பு என்பதால் தென்

ணீர்க் கடல். (சுத்த ஜலம் கொண்ட கடல்.) முதல் பாதத்தாலும், வானரர்கள் தாண்டிய கடல் உவர்க் கடலாதலால் அது இரண்டாம் பாதத்தாலும் கடையப்பட்டது பேசப்படுவதால் பாற்கடல் மூன்றாம் பாதத்தாலும் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளன. இம்மூன்றும் ஏழு கடல்களுக்கும் உபலக்ஷணம்.

இப்படியாக ஜகத்ஸ்ருஷ்டியில் காணப்படும் கடல்களே ஒரு அம்சத்தாலும் அளவிட்டு அறியப்படாதபோது பாதுகாகுணப் பெருங்கடலின் மஹிமையை யாரே உலகத்து அறிந்தாற்றுவார் என்பது ச்லோகத்தின் பரமதாத்பர்யம். அது நான்காம் அடியில் வெகு அழகாகப் பேசப்படுகிறது.

'கிந்தை:'- அவர்களால் அதாவது,- மீன்கள், வானரமுதலிகள், மந்தரபர்வதம்- ஆகியவர்களால் என்ன அடையப்பட்டது? ஒன்றுமில்லையென்றபடி. யானையைப் பார்த்த பிறவிக் குருடர்கள் வர்ணித்தது போல் அவர்கள் ப்ரவ்ருத்தியும். அத்தைத் தின்று அங்கே கிடக்கும் மீன்களாலும் அறியப்படாது. அதைத் தாண்டிச் சென்ற வானரவீரர்களாலும் அறியப்படாது. அதில் உள் நுழைந்து அதைக் கடைந்து கலக்கிய மந்தரமலையாலும் அறியப்படாது நிற்கும் இந்த ஸாமாந்யக் கடலின் பெருமையே அப்படியிருக்க பாதுகா குணாம்போதி விஷயத்தில் அந்த நிலை கைமுதஸித்தம். ஆகவே அதில் உள் புகுந்து ஸஞ்சரித்தாலும் அதை மேலெழுந்தபடியே தாண்டப் பார்த்தாலும் அதை ஸந்மதிமந்தத்தால் கடைந்தாலும் அதின் பெருமையின் ஏகதேசத்தையும் உணரப் போகாது. எனவே கரையில் நிற்பதே நிபுணக்ருத்யம் என்று தீர்மானித்து 'வயம் தடஸ்தா:' என்று அனுஸந்திக்க ப்ராப்தம் என்பது காட்டப்படுகிறது.

கேசவபாதுகாகுண மஹாம்போதி. ஒவ்வொரு சொல்லையும் கவனிக்கவேண்டும். கேசவாம்போதியல்ல, கேசவகுணாம்போதியல்ல, கேசவபாதுகாம்போதியுமல்ல, கேசவபாதுகா குணமஹாம்போதி. கேசவனாகிய அலையற்ற ஆராமுதக்கடல் பல அன்பர்களால் மர்த்திக்கப்பட்டிருக்கிறது. ஸம்மர்த்திக்கப்பட்டுமிருக்கிறது. காஸாரபூர்வ கவிமுக்யர்களாலே முன்னமே நன்றாகக் கடையப்பட்ட கடல். அது விஷயமாக ஒருவரும் பயந்து கரையில் நிற்கவேண்டிய அவசியமில்லை.

கேசவனாகிய கடலிலும் உயர்ந்தது, பெருமையுடையது கேசவ குணக்கடல். குணம் என்றால் தயைதான் குணம். அதைக்கொண்டுதான் மற்றைய எம்பெருமானது குணங்களெல்லாம் தோஷங்களாகாமல் குணங்களாகச் சோபிக்கின்றன என்பது தயாசதகத்தில் காட்டப்பட்ட அர்த்தவிசேஷம். அந்தக் கடலையே உபஜீவ்யமாகக் கொண்டு கமலாவாஸ காருண்யைகாந்திகளாயிருப்பார் ஆழ்வார்கள். அவர்கள் 'அநந்யகதிபி:' என்று முதல் பாதத்தால் வர்ணிக்கப்பட்ட தசையை எய்தியவர்கள். அவர்கள் இன்னும் ஆழ்ந்துகொண்டேயிருக்கிறார்களாதலால் முழுமையும் அறியவில்லையென்பது விளங்குகிறது. 'வம்பவிழ் போதமர் மாதருகந்த அம்மாநிதியைத்' தம் பலமே கொண்டு காணக் கருதுவோர் தயையை உல்லங்கனம் செய்து தாண்டிச் செல்ல முயலுபவர். வானரமுதலிகள் தசை அவர்களுடையது. தயையின் பெருமையையெண்ணி அத் தயையின் அனுபவ மஹாம்புராசியில் தடஸ்தர்களாக நின்றவர்கள் ப்ராசேதஸ ப்ரப்ருதிகள். அதையறிந்துவைத்தே அந்த மஹார்ணவத்தில் மந்தரபர்வதம் பாற்கடலில் இறங்கியது போல் துணிவுடன் இறங்கி, ஆழம் தெரியாமல் தத்தளித்து மிதந்த நிலையை எய்தியவர் ஸ்வாமி தேசிகன் ஒருவரே. 'தத்ராவதீர்ணம், அதலஸ்ப்ருசம், ஆப்லுதம்' என்று அந்த நிலைகளை- அல்ல, அவஸ்தைகளை- அவரே வர்ணிக்கக் காண்கிறோம். அப்படிப்பட்டவரே இங்கே பாதுகாகுண மஹாம்போதி விஷயத்தில் 'தடஸ்தா வயம்' என்று அனுஸந்திக்கிறாரெனின் கேசவகுணாம்போதிக்கும், கேசவபாதுகாகுணமஹாம்போதிக்கும் உள்ள நெடுவாசி விளங்குகிறதல்லவா? 'விஜ்ஞாதா வியதீ-கம்பீரதா' என்றபடி அதலஸ்ப்ருசதாயிருந்தபடியால் தயாநிமக்னரான தம் தசையைத் தாமே பேசிக் காட்டியிருக்கிறாரோ என்றும் நினைக்க இடம் இருக்கிறது.

210737

கேசவபாதுகைதாம் ஆழ்வார். கேசவபாதுகாம்போதி ஆழ்வாரது அருளிச்செயல். அதைக் கடைந்த பேர்கள் பலர். அவர்களுள் முதன்மை ஸ்தானம் ஸ்வாமி தேசிகனுக்குத் தான். 'ப்ரஜ்ஞாக்யே மந்தசைலே..... சடஜிதுபநிஷத் துக்த ஸிந்தும் விமத்நந்' என்று தாமே பேசியபடி அக்கடலைக் கடைந்து காயாவண்ணன் கடைந்தெடுத்த கௌஸ்துபமணிக்கொப்பான பல ரத்தினங்களை எடுத்துக் கொடுத்த பெருமை ஸ்வாமிக்கு அஸாதாரணம், அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த ஸ்வாமியே கேசவபாதுகா குணமஹோததி விஷயத்தில் தடஸ்தராகச் சொல்லிக் கொள்ளுகிறார் தம்மை. இவ்வளவு முணர்ந்த பிறகு தானே பாதுகையின் ப்ரபாவம் எவ்வளவு உயர்ந்தது, அது எந்த நிலையில் நின்று மனதுக்கும், வாக்குக்கும்எட்டாததாக விளங்குகிறது, ஸ்வாமி திருவுள்ளத்தில் பாதுகையின் ஒப்புயர்வற்ற குணங்கள் எப்படி இடம் பெற்று நிற்கின்றன என்பதை நாம் ஒருபடி அறிந்தவர்களாகலாம். ஒரு ஸஹஸ்ர ச்லோகங்களை அருளிச்செய்த போராற்றல் நிற்க, ஒவ்வொரு ச்லோகத்தின் அழகே நமக்கு வானேரப் போமளவும் வாழ்வாக நின்று தாழ்ச்சி யனைத்தையும் தவிர்க்கப் போதாதோ? திருவாய்மொழிதோறும் 'ஆயிரத்திப்பத்து' என்று அநுஸந்தித்துப் போந்தார் ஆழ்வார். அவர் விஷயமான பாதுகையாயிரத்து இப்பாட்டு, இப்பாட்டு என்று அனுபவித்து இன்புற ஒரொன்றுதானே அமையாதோ?

சகலவிதமான

காகிதங்கள், அட்டைகள்

தேவைக்கு

தயவு செய்து கீழ்க்கண்ட விலாஸத்திற்கு

எழுதவும்

M. கிருஷ்ணமாச்சாரி

62, பத்ரையன் தெரு,

மதராஸ்-1.

தந்தி விலாஸம்:- "PAPYRUS"

டெலிபோன் நெ:- 3473

ஸ்ரீ:

ஆசார்ய ஹ்ருதயம்

स्रष्टा देही स्वनिष्ठो निरवधिमहिमापास्तबाधः श्रिताप्तः
स्वात्मादेरिन्द्रियादेरुचितजननकृत् संसृतौ तन्त्रवही ।
निर्दोषत्वादिरम्यो बहुभजनपदं स्वार्हकर्मप्रसाद्यः
पापच्छिद् ब्रह्मनाडीगतिकृदतिवहन् साम्यदश्चात्र वेद्यः ॥

இந்த ச்லோகத்தில் சென்ற மார்கழி மீ ஸஞ்சிகையில் 'संसृतौतन्त्रवाही' என்று ஸ்ரீபாஷ்யம் நவமபாதத்தின் ஸங்க்ரஹம் ஸ்ரீ தேசிகன் ஸாதித்ததற்கு நிர்வாஹம் ஏதாயிருக்குமென்று கேட்ட ஸம்சயத்திற்கு ஸ்ரீ ஸந்நிதியில் காலக்ஷேபகோஷ்டியில் ஸந்த்யதிகரணம் உபக்ரமிக்கும் ஸமயம் ஸ்ரீ அழகியசிங்கர் தனக்கு அஸாதாரணமான ஸௌலப்யத்தின் பரீவாஹத்தின் காரணமாக பரமக்ருபையுடன் அடியேன் (ப்ரியாவில்?) எழுதியிருந்த லேகத்தைத் தாம் கடாக்ஷித்தானதாகவும் ஸாதித்து பின்வருமாறு ஸாதித்தபடி.

ஸ்ரீதேசிகன் அவர் ஸூக்தியில் பகவத்குணானுபவத்தில் ஆழ்ந்தவராய், இந்த ச்லோகத்தில் விசேஷமாக எல்லா பாதங்களையும் பகவத்குணங்களில் பர்யவஸிக்கும்படியாகவே அநுஸந்தித்திருக்கிறார். உதாரணமாக மற்ற பாதங்களை ஸங்க்ரஹித்தபடியே பரமதநிராஸ பாதத்தையும் 'अपास्तबाधः' என்று பகவத்குணத்தில் பர்யவஸிக்கும்படி ஸாதித்திருக்கிறார். அதேமாதிரி 'स्वात्मादेरिन्द्रियादेरुचितजननकृत्' என்றுதான் வியத்கார்யபாதத்தையும் ப்ராணபாதத்தையும் பகவத்குணத்தில் பர்யவஸிக்கும்படி ஸங்க்ரஹித்திருக்கிறார்.

ஸந்த்யதிகரணம் ஜீவனுக்கு ஸ்வப்நாத்யவஸ்தைகளை விசாரிக்கும் விஷயம் நவமபாதமான வைராக்யபாதத்தில் சேரவேண்டியதுதான். ஆனால் பகவானின் ஆச்சர்யஸ்ருஷ்டியோகத்தையும் சொல்வதால் உபயலிங்க பாதத்தில் சேர்க்கப்பட்டிருப்பது அத்யந்தம் உபபந்நம்.

ப்ரக்ருதம் நவமபாதத்தின் ஸங்க்ரஹமாக 'अतो वै खलु दुर्निष्प्रपततरं' முதலியவிடங்களில் சொல்லப்படும் ஜீவனின் அவஸ்தையை ஸங்க்ரஹிப்பதைவிட 'जाग्रत्स्वप्नसुषुप्तिमूर्च्छामरणेषु भगवानेव निर्वाहकः' என்று ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம்பற்றியதுதான் ஸாதீய:. ஏனென்றால் 'संसृतौ तन्त्रवाही' என்பதால் ஜாக்ரத்ஸ்வப்நாத்யவஸ்தைகளையும் பகவானின் ஆச்சர்யஸ்ருஷ்டியோகத்தையும் ஒருங்கே சொன்னதாயிற்று, என்பதோடு மற்ற வேறு எந்த இடத்தை வைராக்யபாதத்தில் ஸங்க்ரஹித்திருந்தாலும் ஒரு அவஸ்தையைமட்டில்தான் ஸங்க்ரஹித்ததாகும். ஆனதால் ஜீவனுக்கு தோஷாவஹமான ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்திமூர்ச்சாமரணங்கள் எல்லாவற்றையுமே சேர்த்துச் சொல்லவேணுமானால் அது தற்சமயம் ஸாதிக்கப்பட்டிருக்கும் 'संसृतौ तन्त्रवाही' என்கிற ப்ரயோகம் ஒன்றினால்தான் ஸங்க்ரஹிக்கப்பட்டதாகும். ஸந்த்யதிகரணத்தை வைராக்யபாதத்தில் ஸங்க்ரஹித்தது மிகவும் ஸரி. ஸ்ரீபாஷ்யத்தில் பரிசயமுள்ள யாரும் ஸுலபமாக க்ரஹிக்கக்கூடியதே. கல எள்கட்டு போய் கல எண்ணெயானாப்போலே ஏதாவது ஒரு முகத்தால் ஸமாதானம் தெரிந்துகொள்ள ஆசைப்பட்ட அடியேனுக்கு ஸாக்ஷாத் ஜகதாசார்யாள் मुखेन இந்த குஹ்யதமமான சாஸ்த்ரார்த்தம் உபதேசமானது 'तस्य पुत्रा दायमुपयन्ति' என்கிற ச்ருத்யர்த்தப்படி அடியேன் பெரியோர்கள் கொடுத்துப்போன ஸுக்ருதவிசேஷத்தின் பயனே என்று அகமகிழ்ந்தேன்.

ஸ்ரீ:

பெரியோர்கள் பக்கலில் (3)

காலத்துக்கேற்ப தத்வார்த்தங்கள் மாறுபடுகின்றன. ராஜநாயகத்வம் வெகுவாக விரும்பப்பட்ட காலமும் ஒன்று இருந்தது. இப்பொழுது ஜனநாயகத்வம் நடைபெறும் அழகும் நம்மால் அநுபவிக்கப்பட்டே வருகிறது. முன்பு பசுக்களைப் பூசித்து வணங்கினார்கள். கோவுக்கும் குதிரைக்கும் என்ன வாசி? என்று இக்காலத்தவர் வினவுகிறார்கள். இவ்விதமிருப்பினும் அடிப்படைத் தத்வார்த்தங்கள் சில முற்காலத்திலும் மாறுபடாமல் எக்காலத்திற்கும் ஏற்ற உண்மைப் பொருள்களாகத் திகழ்கின்றன. ‘பொய்யே பேசு’ என்று எங்காவது எப்பொழுதாவது ஓர் இயக்கம் தோன்றக் கூடுமா? உயிர்களைக் கொல்லாது பிறர் பொருளைக் கவராது வாழ்பவனுக்கு எப்பொழுதும் எங்கணும் மதிப்பு மிகுதியாக உண்டல்லவா? அதுபோல் தங்கள் தங்கள் கருத்தின்படி பெரியோர்களாகத் தோன்றுபவர்களை அவர்கள் போற்றிப் பின்பற்றுவதென்பதும் மறுக்கவொண்ணாத த்ரிகால ஸத்யம். அரசியல்வாதிகள் ராஜதந்த்ரிகளைப் பெரியோரெனக் கருதினால் ஜாதித்வேஷபராயணர்கள் தங்கள் ஸ்வபாவத்திற்குச் சேர மனமும் இருண்டு மையும் கருத்து, தலையும் நரைத்துப்போனவர்களைப் பெரியார் எனப் போற்றுகின்றனர் உலகாயத மார்க்கத்தை விட்டு விலகி, வேதங்கள் வகுத்த வழியில் செல்ல விழையும் நாம், நமது ருசிக்குத் தக்கபடி பெரியோர்களைத் தேர்ந்தெடுத்து ஏற்றியும் போற்றியும் வருகிறோம். நம்முடைய பெரியோர்கள் கண்ணனிடம் அடங்காக் காதல் கொண்டு அவன் தாள்களுக்குத் தொண்டு செய்து உகக்குமவர்கள் சாந்தி முதலிய குணக் குன்றின் சிகரங்கள். சாஸ்த்ரஜ்ஞானம், அநுஷ்டானம் இவைகளில் வந்தவாறே தன்னேரில்லாத தனித் தகைமையாளர்கள். இத்தகைய மஹநீயர்களை நாம் ஸேவிக்கும் போதும், பிரிந்து விடை கொடுத்தனுப்பும் போதும் நிகழும் பரிமாற்றங்களுக்கு எடுத்துக்காட்டாக பல பல ஸம்பவங்களை நமது முன்னோர்கள் தமது நூல்களில் அமைத்து அழகுற வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளைச் சிறிது இங்கு அனுபவிப்போம்.

பார்வதி சிவனை கணவனாகக் கைபிடிக்கக் கோலி, இமயமலைச் சாரலில் தவக் கோலம் பூண்டு கடும் நியமங்களை மேற்கொண்டாள். அவ்வித புண்யம் செய்வது அல்லாது வேறு வழி தோன்றவில்லை லோகோத்தரனை பர்த்தாவைப் பெறுவதற்கு. வெய்யிலில் காய்ந்தாள். மழையில் நனைந்தாள். வெட்ட வெளியில் நிமிர்ந்து நின்று அவள் தவமியற்றும் போது வானத்து மழைத்துளிகள் சற்றே மூடியிருக்கும் கண் இமைகளில் முதலில் க்ஷணம் வந்து தங்கின. செறிந்து வளர்ந்துள்ள அவைகளில் அதிக நேரம் தங்கமாட்டாமையால் மழைத்துளிகள் வழுக்கி உதடுகளில் வீழ்ந்து அவைகளை செங்கமலத்திதழிலும் அதிகமாக சிவக்கச் செய்தன. பின்பு மார்பகத்து குன்றுகளில் மோதிச் சிதைந்து கீழிறங்கி நாபீதடாகத்தில் சென்று சேர்ந்தன. முன்பு உதடுகளுக்குச் சாயம் தீட்டவும் பந்து விளையாடவும் உபயோகப்பட்ட கைகளில் இப்பொழுது கூரிய தர்ப்ப அங்குரங்களை ஆய்வதால் புண்பட்ட கைகளில் ஜபமாலையை எடுத்துக் கொண்டாள். தானே நேரில் குடநீர் பெய்து ஆச்ரமத்தில் வ்ருக்ஷங்களை வளர்க்கலானாள். அவைகளிடம் அவளுக்குண்டான புத்ரவாத்ஸல்யம் பின் பிறக்கப்போகும் பாலகுஹனாலும் குறைக்க முடியாததாயிருந்தது. மெல்லிய கடல் நுரையை நிகர்த்த மெத்தென்ற பஞ்சசயனத்திலும், தன் கூந்தலிலணிந்த மலர் இதழ்கள் உதிர்ந்து உறுத்த அதனால் உறக்கம் வரப்பெறாத பார்வதி இப்பொழுதெல்லாம் கைகளை தலையணையாக தரையில் துயில முயல்கிறாள். அவள் தன்னுடலில் குடி கொண்டிருந்த நாட்டியக் கலையையும் சண்களின் மருண்ட பார்வையையும் வஸந்தருதுவின் வஞ்சிக் கொடியினிடத்தும் பரிசயமுள்ள பெண் மான்களிடத்தும் அடைவே அடகு வைத்தாள். வைகறையில் துயிலெழுந்து தீர்த்தமாடி அக்னியை அர்ச்சித்து மரவுரி உடுத்தி அமர்ந்திருக்கும் அவளை பல மஹர்ஷிகளும் திரண்டு வந்து தரிசித்துச் சென்றார்கள். ‘ந தர்மவ்ருத்தேஷு வயஸ்ஸமீக்ஷ்யதே’ என்கிறான் மஹாகவி. ‘ந தேந வ்ருத்தோ

ஸவதி யெநாஸ்ய ஷரிதம் ஶிரஃ। யொ வா யூவாவி க்ஷயீயாநஃ தம் தெவாஃ ஷ்வீரம் விதுஃ' என்பது மநு நீதி. தர்மம், வித்யை தபஸ் என்றெல்லாம் காரணம் காட்ட இடம் இருக்குமேல் பிறப்பினுல் வரும் வயது பின்ன ணியில் வைத்துப் புறக்கணிக்கப்படும். தலை நரைத்தவன் என்றது அங்கு கொள்ளப் படாது. ஆகையால் பார்வதி வயதில் இளை யவளேயாயினும், மஹர்ஷிகளும் கொண்டாட நின்ருள்.

இவ்விதமிருக்கும்போது பார்வதியின் பர் ணசாலையில் ஒரு நாள் க்ருஷ்ணஜிநமுடுத்து, பலாச தண்டம் கைக்கொண்டு ப்ரஹ்மசர்யமே உருக்கொண்டதென பார்ப்போர் ப்ரமிக்கும் வண்ணம் ஓர் ப்ராஹ்மணன் ப்ரவேசித்தான். பரபரப்புடன் எழுந்து பார்வதியும் வந்த அதி தியை உபசரித்து இருக்கச் செய்தாள். பார் வதியின் உள்ளமறிய விரும்பி, அந்த வேஷ மணிந்து வந்த சந்த்ரசேகரனும் நீண்ட ப்ரயா ணத்தினுல் மூண்ட களைப்பைக் களைவது போல் சற்று ஓய்ந்திருந்து கள்ளம் கபடம் அற்ற தன் பார்வையை பார்வதியின் மேல் வீசிப் பேச ஆரம்பித்தார். இங்குதான் பெரி யோர்களிடம் பேசவேண்டிய முறை வெளியா கிறது. 'அபி க்ரியார்ஹம் ஸுலபம் ஸமித் குஶம்' உன்னுடைய அக்னிகார்யங்களுக்கு தேவைப்பட்ட தர்ப்பம் ஸமித் முதலியவை களை ஸுலபமாகப் பெறுகின்ருயா? 'ஜலாந்யபி ஸ்நாநவிதிக்ஷமாணி' நீராடுவதற்குப் பாங்கான நீர் நிலைகள் அருகிருக்கின்றனவா? 'அபி ஸ்வஶக்த்யா தபஸி ப்ரவர்த்தஸே' உன் சரீரசக்தியை அளவிட்டு அலுவல்களை வகுத்துக்கொண்டு இருக்கிருயா? 'சரீரம் எக் கேடுற்ருல் எனக்கென்ன? தர்மமே எனது குறிக்கோள்' என்னவொண்ணுது. 'ஶரீரமாத்யம்

கலு தர்மஸாதநம்'. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பயனும் பெற இவன் சரீராரோக்யத்துடன் இருக்க வேண்டியது மிக மிகமுக்யம். ஆகையால் உடல் நலத்தை உபேக்ஷிக்காமல் இருக்கிருயா? என் றிவ்வாறெல்லாம் ஈச்வரன் வினவினுன்.

பெரியோர்களிடம் பேச நேரும்போது அவர்கள் நேசிக்கும் விஷயங்களை முற்பட வினவவேண்டும் என்றிதனுல் தேறிற்று. திருவரங்கம் முதலிய திவ்யதேசங்களிலிருந்து எழுந்தருளும் பாகவதோத்தமர்களை குசலம் விசாரிக்கும்போது 'எம்பெருமான் ஸந்நிதியில் திருவாராதனம் முதலியன தட்டில்லாமல் நடைபெறுகின்றனவா' என்றே முக்கியமாய் பெரியோர்கள் விசாரிப்பதுவழக்கம். இவ்வுலக க்ஷேமத்தையும் நாம் புறக்கணிப்பதற்கில்லை. 'சரீரமாத்யம் தர்மஸாதநம்' என்றசிறந்தசாஸ்த் ரார்த்தமுமிங்கேவெளியிடப்பெற்றது. ப்ராஹ் மணப்பெரியோர்களை வினவுமிடத்தில் சரீரா ரோக்கியத்திற்கு இரண்டாம் இடம் தரப் பட்டிருந்தாலும், மஹாராஜாக்களை ஸந்திக் கும் ஸந்தர்பத்தில் ஆரோக்யத்தையே முத லில் முக்கியமாய் வினவவேண்டும் என்பது ஓர் சாஸ்த்ரார்த்தம். 'ப்ராஹ்மணம் குஶலம் ப்ருச்சேத் க்ஷத்ரபந்தும் அநாமயம்' ப்ராஹ்ம ணர்கள் தர்மத்தை நேசிப்பவர்கள். அரசர் களோ ராஜ்யத்தை உபாஸிப்பவர்கள். அர சாளவேண்டி, தேஹபலம் ஸேநாபலம் முதலி யன அவர்களுக்கு தேவைப்படுகின்றன. ஆத லால் க்ஷத்ரியர்களைக்காண நேரிடில் அவர் களின் தேஹாரோக்யத்தை முதலில் விசாரித் தல் வேண்டும் என்பது உசிதமேயாகும்.

இவ்விதம், இயற்கைக்கு ஒத்தனவாய் சாஸ் திரங்களுக்கும் அமைந்தனவாய் இருந்த எத்த னையோ பழக்கவழக்கங்கள் இக்காலத்தில் தகர்த்தெறியப்பட்டுவிட்டன. அந்தோ! அவை களை யாரே மறுபடி நிலை நாட்டவல்லவர்?

ஸ்ரீ:

காஞ்சீபுரத்தில் எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும் பட்டு சேலைகள்

காஞ்சீபுரம் விலைக்கே சேலத்தில் கொடுக்கப்படும்

கல்யாணகாலத்தை முன்னிட்டு

காஞ்சீபுரம், கொள்ளேகாலம், தருமாவரம், ஆரணி, பட்டு சேலைகள், கண்ணைக் கவரும் சிறந்த நாகரீகமான பார்டர்கள் 6 கெ, 8 கெ, 9 கெ, 9½ கெஜம் சேலைகள் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

வெண்பட்டு 10X6, நூல்கோர்வை, சரிகைபேட் 10X6, 8X8, 9X9, ஜோடிகளும் மிகவும் மலிவான விலையில் கிடைக்கும்

எங்கள் கடைக்கு நேரில் விஜயம் செய்து ஜவுளிகள் வாங்கி திருப்தி அடையக் கோருகிறோம்.

கந்த விலாஸ்

காஞ்சீபுரம் ஜவுளிக்கடை

அ. கந்தசாமி முதலியார் & சன்ஸ்

போன் நெ. 123: கடை வீதி: சேலம் 1.

உரிமையாளர்:- அ. க. தங்கவேல் முதலியார்.

ஹெட் ஆபீஸ்:- காந்திரோடு, காஞ்சீபுரம். போன்: 12.

பிராஞ்சுகள்:-	போன்: 71557,	போன்: 121,	போன்: 123,
213, தங்கசாலை தெரு	மைலாப்பூர்	கீழ ரதவீதி	கடை வீதி
மதராஸ்-1.	மதராஸ்-4.	திருநெல்வேலி	சேலம்-1.

மேட்டூர், பென்னி மில் ஜவுளிகளும் கிடைக்கும்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

சூர்ப்பணகையின் நாசிகையை அறுத்து அந்த நாசிகை விழுந்த இடம் நாசிக்கென்றும் பெருமாள் எழுந்தருளியிருந்த கோதாவரீ தீரம் பஞ்சவடி என்றும் சொல்லுகிறார்கள். பஞ்சவடியில் பெருமாள் எழுந்தருளியிருந்த இடமென்று ஒரு இடத்தைக் காட்டுகிறார்கள். அந்த இடத்தில் இப்பொழுது ஐந்து ஆலமரம் இருக்கிறது. ஆனால் அவைகள் பழைய ஆலமரம் இருந்த இடத்தில் அது போய் புதிதாக முளைத்த இடந்தான் என்று சொல்லுகிறார்கள். அங்கிருந்து 1 மைல் தூரத்தில் தபோவனமென்று கோதாவரி ஓரங்களைச் சொல்லி வருகிறார்கள். அவ்விடத்தில் கபிலா நதி என்கிற ஒரு அருவி கோதாவரியில் வந்து சேருகிறது. கோதாவரி ப்ரவஹிக்கும் இடங்கள் அனேகமாக கருங்கல் பாறைகளாகத்தானிருக்கிறது. அந்த இடத்தில் கருங்கல் பாறையில் மூன்று பிலங்கள் இருக்கிறது. அந்த இடத்தில் அத்யாத்மராமாயணப்படி ஸீதை அக்னியில் ப்ரவேசித்து விட்டதாயும் அதாவது ஸ்ரீராமன் ஸீதையைப் பார்த்து முன்னாடியே ராவணன் வரப்போகிறானென்றும், நீ அக்னி ப்ரவேசம் செய்து விடு, சாயா ஸீதையை வைத்து விடு என்று சொல்லிச் சென்றதாகவும் ஸாக்ஷாத் ஸீதையை ராவணன் எடுத்துப் போகவில்லை, சாயா ஸீதையைத்தான் எடுத்துப் போனானென்றும், ராவணவதமான பிறகு அக்னி ப்ரவேச காலத்தில் சாயாஸீதை அக்னியில் ப்ரவேசிக்கவும், ஸாக்ஷாத்ஸீதை அக்னியிலிருந்து வெளிக்கிளம்பினதாகவும் அத்யாத்ம ராமாயணக் கதையென்றும் அந்தப்படி அக்னி ப்ரவேசம் செய்த இடம் இதுவென்றும் இங்கு எட்டு புண்ய தீர்த்தங்களிருப்பதாயும் இந்த மூன்று பிலங்ளுகம் ப்ரம்ம, விஷ்ணு, ருத்ர யோகிகளென்று சொல்லப்படுகிறதென்றும் அவைகள் மேல் தனித் தனி பிலமாக யிருப்பதுடன் அடியில் மணலில் செய்யப்படும் கிளிக் கூண்டுகள் போல் ஒன்றுக்கொன்று புணர்ப்பு இருப்பதால் ஒன்றிலிறங்கி அடி வழியாக மற்றொன்றில் கிளம்பி, மறுபடியும் அடி வழியாகவே மற்றொன்றுக்குப் போய் அங்கிருந்து வெளியில் வரவேண்டுமென்றும் அவைகள் மூன்றிலும் மூன்று தீர்த்தங்களிருப்பதாகவும் சொல்கிறார்கள். அவ்விடத்தில் சூர்ப்பணகை நாஸிகாச் சேதம் பண்ணுவதாகக் கல்லில் ஒரு பிம்பம் இருக்கிறது. அவ்விடத்தில் கோதாவரி பாறைகளின்மீது ரொம்ப வேகமாக ஓடி வருகிறது. அந்த இடங்களுக்கெல்லாம் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளி கடாக்ஷிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்ததின் பேரில் தை 29௳ எழுந்தருளி கடாக்ஷிக்கும்படியிருந்தது.

பஞ்சவடியில் ஸ்ரீமத் ராமாயணத்தில் ஹேமந்த ருதுவை வர்ணித்து இருக்கிறபடி இப்போதும் ஹேமந்த சிசிர ருதுக்கள் சந்தியானபடியால் அதில் வர்ணித்தபடியே குளிரும் அதிகமாக இருந்தது. அங்கு எழுந்தருளியிருந்த காலத்தில் தொடர்ந்தாற்போல் ஒரு வாரத்திற்கு மேல் பின்மாலை கோதாவரிக்கு நீராட்டத்திற்கு ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியாயிற்று. எழுந்தருளும்போதெல்லாம் ஸ்ரீராமன் நீராட்டத்திற்கு கோதாவரிக்கு எழுந்தருளும்போதுதான் பரதனை நினைத்தாயிற்றென்றும் அந்தக் காலங்களில் பெருமாளுக்கும் இளைய பெருமாளுக்கும் ஸம்வாதமாகத்தான் ஹேமந்தருது வர்ணனமும் செய்யப்பட்டிருக்கிறது என்றும் ஸாதித்துக்கொண்டு குளிராயிருந்தாலும் உத்ஸாஹமாக கோதாவரியிலேயே நீராட்டம் செய்தருளும்படியிருந்தது. மாசி மீ 3௳ பௌர்ணமியன்றும் 10௳ வியாழக்கிழமையன்றும் மற்றும் சில தினத்தில் மாத்யாஹ்னிக ஸ்நாநத்திற்குக்கூட எழுந்தருளியாயிற்று. அதனுடைய சைத்யத்தை அநுஸந்தித்து அது பொல்லா நதியென்றும் அதனால்தான் ஸீதை தன்னை ராவணனெடுத்துப் போகிறானென்பதை ராமனிடம் சொல்

லென்று 'ஹம்ஸகாரண்டவாகீர்ணாம் வந்தே கோதாவரீம் நதீம் ॥ க்ஷிப்ரம் ராமாய ஶம்ஸ த்வம் ஸீதாம் ஹரதி ராவண: ॥' என்று ப்ரார்த்தித்து கேட்டிருக்கச்செய்தேயும் பெருமாளும் இளைய பெருமாளும் தனித் தனியே கோதாவரியைப் பார்த்து ஸீதாவிஷயத்தைக் கேட்டும் பூதங்களும் சொல்லும்படி தூண்டியும் ராவணபயத்தால் சொல்லாமலிருந்துவிட்டுப் பெருமாளை ரொம்பவும் கஷ்டப்படுத்திவிட்டது. இதையும் ஸ்ரீ வால்மீகியே குறிப்பிட்டிருக்கிறார். 'தத: பூர்வோதிதா ஸர்வை: ஶம்ஸாஸ்மை தாம் வ்யாஜிஹீ: । ந ச ஸாப்யவதத்ஸீதாம் ப்ருஷ்டா ராமேண ஶோசதா ॥ ராவணஸ்ய ச தத்ரூபம் கர்மாணி ச துராத்மன: । த்யாத்வா பயாத்து வைதேஹீம் ஸா நதீ ந ஶஶம்ஸ தாம் ॥' (ஆரண்யகாண்டே 64 ஸர்கே 6 ஶ்லோ) என்று அதன் பொல்லாத்தனத்தை எடுத்து ஸாதிக்கும்படியிருந்தது.

யானை அவ்விடம் வந்துசேருவதற்குகொஞ்ச நாள் பிடித்தபடியாலும் ஸஞ்சாரத்தை வடதேசத்தில தொடருவதா வேண்டாமா என்கிற சர்ச்சையினாலும் அங்கு இரண்டு வாரம் பெருமாள் எழுந்தருளியிருக்கும்படியிருந்தது. ஒருவராகவே ஆராதனம் கைங்கர்யம் பார்த்து வந்த இஞ்சிமேடு ஸ்ரீ ராஜகோபாலாசாரியரும் தனது தேஹஸ்திதி ஸரியாக இல்லாதபடியால் இதை விட்டு ஸஞ்சாரம் எழுந்தருளுவதானால் தான் அவசியம் ஊருக்குப்போகவேண்டுமென்றும் ஸஞ்சாரத்தில் வருவது சிரமமென்றும் அப்படி அவசியம் ஸஞ்சாரம் எழுந்தருளுவதானால் ஒவ்வொரு கைங்கர்யத்திற்கும் மூன்று பேர் நாலு பேர் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் ப்ரார்த்தித்துக்கொண்டிருந்தார். தேவருக்குத் தெரிந்த கைங்கர்யபரர்கள் எத்தனை பேரிருந்தாலும் நியமனமாகியிருப்பதாக தேவர் முக்ய ப்ரயத்னம் எடுத்துக்கொண்டு வரவழைக்கவும் என்றும் ஸாதிக்கும்படியிருந்தது.

அவ்வூரில் முனிசிபல் சேர்மனாகவும் சுக்லயஜுர்வேதாத்யயனம் பண்ணினவராயும் வைதிகச்ரத்தையுள்ளவருமான கோவிந்தசாஸ்திரிவாரே என்பவர் ஸ்ரீ அழகியசிங்கரைத் தெண்டன் ஸமர்ப்பித்து இவ்வூரில் வேதாத்யயனம் செய்தவர்களும் சாஸ்த்ரம் வாசித்தவர்களும் ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பிக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள் என்று ப்ரார்த்தித்து அவர்களை நியமனத்தின்பேரில் அழைத்துக்கொண்டு வந்தார். சிலர் கனாந்தம் அத்யயனம் பண்ணினவர்களாக இருந்தார்கள். வ்யாகரணசாஸ்த்ரம் வாசித்தவர்களும் இருந்தார்கள். அவர்கள் அவரவர்களுடைய யோக்யதைக்கு அநுகுணமாக க்ருஷ்ணயஜுர்வேதத்திலும், சுக்லயஜுர்வேதத்திலும் ஸம்ஹிதை கனம் முதலியதுகளைச்சொன்னார்கள் 'வைஹாவனே ஸத்யஸ' என்கிற ஸூத்திரத்திலும் கோடிக்ரமமாக வாக்யார்த்த விசாரம் நடந்தது. அவர்களுக்கு யதோசிதம் ஸம்பாவனை செய்தாயிற்று. அவர்களுடைய ப்ரார்த்தனையின்பேரில் அன்று மாத்யாஹ்நிக ஸ்நாநத்திற்காக கோதாவரி தீர்த்தகட்டத்திற்கு பல்லக்கில் எழுந்தருளி தீர்த்தகட்டத்திலுள்ள மற்ற ப்ராஹ்மணர்களுக்கும் யதோசிதம் கொடுத்துவிட்டு மாத்யாஹ்நிக ஸ்நாநம் செய்தருளி நித்யப்படி எழுந்தருளும் வழியாக ஆச்ரமத்திற்கு எழுந்தருளியாயிற்று. மாசிமீ 10உ ரீவா ஸமஸ்தானத்தில் முன்னம் ராஜகுருவாயிருந்த ஸ்ரீராகவாசாரியர் என்பவர் 80 வயதுள்ளவர். (அநேகமாக வட தேசங்களில் இம்மாதிரி பீடாதிபதிகளாயும் ராஜகுருவாயுமிருப்பவர்கள் ப்ரஹ்மசாரிகளாகவேதானிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.) அவர் அந்தப் பக்கங்களிலுள்ள இடங்களுக்கு ஸஞ்சாரமாகப் போய்க்கொண்டிருக்கிறவர் பெருமாளும் ஸ்ரீமதழகியசிங்கரும் எழுந்தருளியிருப்பதைக் கேட்டு அவ்விடம் வந்து பெருமாளையும் ஸேவித்துவிட்டு ஸ்ரீ அழகியசிங்கரையும் தெண்டன் ஸமர்ப்பித்துவிட்டு ஒரு நாள் ததீயாராதனம் தன்னுடையதாக இருக்கவேண்டுமென்று அதற்கு வேண்டிய த்ரவியத்தைப்

பூராவாக ஸமர்ப்பித்து கைங்கர்யபரர்களையும் வித்வான்களையும் ஸன்மானித்துப் போனார். அவர் வந்த ஸமயம் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபஸமய மாயிருந்தது. அந்த ஸமயத்தில் விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கு ஜகத்காரணத்வம் லக்ஷணம் என்று சொல்லுகிற விஷயத்தில் அவருக்கு ஏற்பட்ட ஸம்சயத்தை ஸ்ரீஸந்நிதியில் விஜ்ஞாபித்தார். அதற்கு ஸமாதானத்தை ஸாதிக்கும்படியிருந்தது. அவர் மிகவும் த்ருப்தராய்ப் போனார்.

மாசிமீ 13வ மத்யாஹ்னம் பஞ்சவடியை விட்டு வடதேசஸஞ்சாரம் எழுந்தருளுவதாகத் திருவுள்ளம் பற்றிப் புறப்பட்டாயிற்று. அன்று ஞாயிற்றுக்கிழமையானதால் பம்பாயிலிருந்து ஸ்ரீ சடகோபாசாரியர், ஸ்ரீ பி. ஆர். ஸுந்தராச்சாரியர் முதலியவர்களும் புறப்படும் ஸமயத்தில் ஸ்ரீ கர்வாஜீ ஸேட்டும் வந்தார்கள். இன்று நீங்கள் வந்திருப்பதே ஒரு ஸுசகம் என்றும், வடதேசயாத்திரைக்கு பம்பாய் வாஸிகள் தான் முக்கிய காரணமாதலால் இங்கிருந்து புறப்படும் வடதேசயாத்திரைக்கும் நீங்களே வழியனுப்ப வந்தவர்களாக நினைக்கலாமென்றும் ஸாதிக்கும்படியிருந்தது. கர்வாஜீ அனுப்பிய ஜீப் கார் அப்போது பம்பாய்க்கு அதன் பின்னால் ஒரு ட்ரெயிலர் இணைப்பதற்காகப் போயிருந்தது. அது வர இரண்டு நாட்களாகும் என்று விஜ்ஞாபித்தார். தன்னுடைய அபிப்ராயப்படி ஜீப், லாரி முதலியதுகளால் இந்த யாத்திரைக்கு விசேஷ ஸௌகர்யமில்லையாகையால் அதை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கவில்லை என்று ஸாதித்துவிட்டுப் புறப்பட்டாயிற்று. ஆராதகரும் ஊருக்குப் போவதாகத் தீர்மானித்து அங்கேயே நின்றுவிட்டார். அன்று ராத்திரி 15 மைல் தூரத்திலுள்ள ஓஜர் என்கிற கிராமத்திற்கு எழுந்தருளினார். ஓரிடத்தில் சிறிது நாட்கள் தங்கி மறுபடி ஸஞ்சாரம் ஆரம்பிக்கும்போது புதிதான ஸஞ்சாரத்திற்குள்ள கார்யங்கள் வந்துவிடுகிறபடியால் குறிப்பிட்டபடி வண்டிகள் கிளம்பி வரவில்லை. அன்றும் ராத்ரி வண்டிகளெல்லாம் மிகவும் நாழிகை கழித்துத் தான் ஓஜருக்கு வந்து சேர்ந்தன. அன்றுமுதல் ஸர்வவிதகைங்கர்யமும் பண்ணுவது தான் முக்தாநுபவமாகையால் அந்த அநுபவத்தையும் பெருமாள் தனக்குக்கொடுக்கத் திருவுள்ளம் பற்றியிருப்பதை நினைத்து, உவந்து பெருமாளெழுந்தருளப் பண்ணுவது முதலிய எல்லா ஆராதனகைங்கர்யங்களையும் ஸ்ரீ அழகியசிங்கரே செய்தருள ஆரம்பித்தாயிற்று. மாசிமீ 14வ அவ்விடமிருந்து மத்யாஹ்னம் புறப்பட்டு 6 மைல் தூரத்திலுள்ள பிம்பல் கிராமத்திற்கு எழுந்தருளினார். 15வ த்வாதசி ஆராதனமும் ததியாராதனமும் அவ்விடம் நடந்தது. 15வ ராத்திரி 3 மணிக்குப் புறப்பட்டு 10 மைலில் உள்ள வடாலி போய் என்கிற கிராமத்திற்கு எழுந்தருளினார். அன்று அங்கு ப்ரதோஷ ஆராதனம் நடந்தது. அன்றிரவு 12 மணிக்குப் புறப்பட்டு 8 மைல் தூரத்திலுள்ள சாந்தூர் எழுந்தருளியாயிற்று. சாந்தூரில் பம்பாய் ரெவினியூ மந்திரி, பாபுஸாஹேப் ஹீரே பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் தண்டன் ஸமர்ப்பித்துவிட்டுத் தனக்கு எலக்ஷனில் விஜயம் கிடைக்கும்படி அநுக்ரஹிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்துப் போனார். சாந்தூரிலிருந்து 17வ மத்தியானம் புறப்பட்டு 12 மைல் தூரத்திலுள்ள சௌந்தாணு எழுந்தருளினார். 18வ வெள்ளிக்கிழமைஅமாவாஸ்யை ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 12 மைல்தூரமுள்ள மாலிகாம் எழுந்தருளினார். அவ்விடத்தில் 21வ வரையில் எழுந்தருளியிருந்தார். அவ்விடமுள்ள ஸேட் லக்ஷ்மீநாராயண ஜாஜு முதலிய மார்வாடிகள் ஊருக்குள் ஸௌகர்யமான கிணறுவஸதியுள்ள இடம் இல்லாததால் பெருமாள் ஊருக்குள் எழுந்தருளியிருக்க ஸௌகர்ய மில்லாவிட்டாலும் ஆஸ்த்ரீபாலம் தங்களை அநுக்ரஹிக்கவேண்டி பட்டணப்ரவேசமாக எழுந்தருளவேண்டுமென்று ரொம்பவும் ப்ரார்த்தித்து 20வ ஸாயங்காலம் தந்தப்பல்லக்கில் விசேஷ வாத்யத்துடன் பெருமாள்பல்லக்குடன் பட்டணப்ரவேசம் பண்ணிவைத்து அன்று ததியாராதனம் தங்களுடையதாக இருக்கவேண்டுமென்று அதற்கு வேண்டிய திரவியத்தையும் ஸமர்ப்பித்தார்கள். 21வ ராத்திரி அவ்விடமிருந்து புறப்பட்டு 18 மைல்தூர

முள்ள ஆர்வி என்கிற ஊருக்கு எழுந்தருளி
னர். 22வ ராத்திரி புறப்பட்டு 12 மைல்
தூரத்திலுள்ள தூளியாவிற்கு எழுந்தருளினர்.
தூளியாவில் ப்ரபலஸ்தர்களான பூஷ்மல் அகர்
வால்முதலியவர்கள் ஊருக்குள் அகர்வால்பவன்
என்ற இடம் கிணற்று வசதிகளுடன் மிகவும்
சௌகர்யமா யிருக்கிறதென்றும் அங்கு பெரு
மாளை எழுந்தருளப்பண்ணி ஆராதிக்க ஆஸ்
தையாயிருப்பதாலும் அப்போதுதான் எல்லா
ரும் பெருமாளை ஸேவிக்க ஸௌகர்யமாயிருக்
குமென்று ரொம்பவும் ப்ரார்த்தித்து 23வ
ராத்திரி விசேஷ வாத்யம் லைட்டுகளுடன்
பெருமாளையும் ஸ்ரீஅழகியசிங்கரையும் பட்
டண ப்ரவேசமாக எழுந்தருளப்பண்ணிக்
கொண்டு போனர்கள். 24வ அவ்விடம் ஆரு
இத்தார்கள். அவ்விடத்தில் வேதசாஸ்த்ர
பாடசாலை ஒன்று நடந்து வருகிறதென்றும்,
அதிலுள்ள வித்யார்த்திகள் 20 பேர்கள் என்
றும் சொல்லி 20 வித்யார்த்திகளுடன் அந்த
பாடசாலை வேதசாஸ்த்ர அத்யாபகர்கள் வந்
தார்கள். வித்யார்த்திகளை அவர்களிஷ்டப்
படி வேதங்களையும் காவ்யாதிகளையும் சொல்லச்
சொல்லி கேட்டு வித்யார்த்திகளுக்கும் உபாத்
யாயர்களுக்கும் யதோசிதம் ஸம்மானம் செய்
தருளியாயிற்று. 24வ ராத்திரி அங்கிருந்து
புறப்பட்டு 12 மைல் தூரத்திலுள்ள சாங்கீர்
எழுந்தருளியாயிற்று.25வ ராத்திரிபுறப்பட்டு
8 மைல் தூரமுள்ள கார்தாணவிற்கு எழுந்தரு
ளியாயிற்று. 26வ ராத்திரி புறப்பட்டு 8 மைல்
தூரத்திலுள்ள தாபீ நதி தீரத்திலுள்ள சுகவத்
திற்கு எழுந்தருளினர். அன்று காலையில்
தாபி நதியில் நீராட்டம் செய்தருளியாயிற்று.
ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் தாபீ பயோஷ்ணீ
என்று இரண்டாவது அம்சத்தில் 3-வது அத்
யாயத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது. அதை
இவ்விடத்தில் சிலர் தப்தி என்று வ்யவஹரிக்
கின்றனர். தாபீ என்பதைத்தான் தபதி
என்று பாஷையில் வ்யவஹரிக்கிறார்கள் என்று
நிரூபகர்கள் சொல்கிறார்கள். இவ்விடம் ஷிர்
பூரிலிருந்து சேத் ராமசந்த்ர ராட்டி மற்று
முள்ள சேட்டுகளுடன் வந்து பெருமாளை
ஸேவித்து ஸ்ரீ அழகியசிங்கரையும் தெண்டன்
ஸமர்ப்பித்து 8 மைல் தூரத்திலுள்ள தங்களூ
ருக்கு தங்களுடைய் கட்டடத்தில் எழுந்தரு
ளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவர்
கள் ப்ரார்த்தனைக்கு இணங்கி 27வ ராத்திரி
புறப்பட்டு ஷிர்பூருக்கு எழுந்தருளினர். 28வ
கட்டணங் கட்டி பூரா ஆராதனமும் நடத்தி
வைத்தார்கள். எல்லாரும் ஸேவிக்கவேண்டிய
தற்காக தங்கள் ஊரில் பட்டண ப்ரவேசமாக
எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்ததின்
பேரில் பெருமாள் பல்லக்குடன் தந்தப் பல்
லக்கில் விசேஷ வாத்யங்களுடன் பட்டணப்ர
வேசம் நடந்தது. அன்று ராத்திரி புறப்பட்டு
9 மைல் தூரத்திலுள்ள சூளியாவுக்கு எழுந்த
ருளினர். மாசி மீ 29வ ஸ்ரீ பிள்ளைபாக்கம்
அழகியசிங்கர் திருநக்ஷத்திரம் ஸேவை சாற்று
முறையுடன் நடந்தது ஸ்ரீபாஷ்யகாலக்ஷேப
மும் சாற்றுமுறையும் அன்று நடந்தது. ஸஞ்
சாரத்தில் மூன்றாவது ஆவர்த்தி ஸ்ரீபாஷ்ய
காலக்ஷேபம் இதோடு ஆகியிருக்கிறது.
அடுத்த பக்ஷத்திலிருந்து கீதாபாஷ்யகாலக்ஷே
பமும் இந்த பக்ஷத்தில் ரஹஸ்யத்ரயஸாரம்
சாற்றுமுறையும் ஆகப்போகிறபடியால் முன்
நிறுத்தியிருந்த ஈடு பகவத்விஷய காலக்ஷேப
மும் 6ம் பத்திலிருந்து ஆரம்பிப்பதாகத் திரு
உள்ளவும்பற்றியாகியிருக்கிறது. (தொடரும்)

ஸ்ரீ:

ஹம்ஸஸந்தேசம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

इच्छामात्रात्जगदपरधा संविधातुं क्षमाणां
इक्ष्वाकूणां प्रकृतिमहतामीदृशीं प्रेक्ष्य वेलाम् ।
लक्ष्यालक्ष्ये जलधिपयसा लब्धसंस्थां त्रिकूटे
लङ्कां गन्तुं तव समुचितं राक्षसीं राजधानीम् ॥

(பதவுரை) ஜகத்- இவ்வுலகம் முழுவதையும் அபராதா- இப்பொழுதிருப்பதற்கு அடியோடு வேறு ப்ரகாரமாய் மாற்றிப்படைக்க, இச்சாமாத்ராத்- தங்கள் இஷ்டமென்னும் ஒரே காரணத்தால், (நினைத்தமாத்ரத்தால்) க்ஷமாணாம்- வல்லமையுள்ளவர்களான, ப்ரக்ருதிமஹதாம்- ஸ்வபாவத்தாலேயே மஹா மஹிமவான்களுமான, இக்ஷ்வாகூணாம்- இக்ஷ்வாகுவம்சத்தோருக்கு, (நேர்ந்திருக்கும்) ஈத்ருசீம்- இத்தனை கொடுமையான, வேலாம்- ஆபத்து ஸமயத்தை, ப்ரேக்ஷ்ய- உன் கண்களாலும் மனக்கண்ணாலும் நன்றாய்ப் பார்த்துவிட்டு, ஜலதிபயஸா- ஸமுத்ர அலைகள் மிகவுயரக் கிளம்புவதும் இறங்குவதுமாய் அலைக்கும் கடல்நீரால், லக்ஷ்யாலக்ஷ்யே - கண்ணுக்குத் தெரிவதும் மறைவதுமாய், த்ரிகூடே - த்ரிகூடபர்வதத்தின் மேலே, லப்தஸம்ஸ்தாம்- அமைக்கப்பட்டுள்ள, ராக்ஷஸீம்ராஜதானீம் லங்காம்- ராக்ஷஸ ராஜதானியான இலங்கைக்கு. கந்தும்- பரந்து (உடனே) செல்வது, தவ ஸமுசிதம்- உமக்கு மிகவும் உசிதமாகும்.

(விசேஷவுரை) 'கேவலம் மநுஷன் நான்' என்று தம்முடைய தாழ்மையைக் கூறினார். தம்மை எத்தனை தாழவும் பேசுவாராயினும், நினைக்கக்கூடாத நீசத்தன்மையை அபிமானித்தாலும், தம் பெரியோர்களைத் தாழ்த்திப் பேச மாட்டார். தாழவும் நினையார். தம் குலமூத்தோரின் அளவற்ற வல்லமைகளையும் ஸ்வபாவ ஸித்தமஹிமைகளையும் மிக்க உந்நதமாகவே வர்ணிக்கிறார். தற்புகழ்ச்சி தோஷம்; குருக்களான வம்சமூதாதைகளைப் புகழ்வது கடமையும் குணமுமாகும். முன் ச்லோகத்தில் இழிவான ஸாரத்யப்பணி செய்வதில் விசேஷ த்ருஷ்டாந்தமாகவெடுத்த விச்வஸ்ரஷ்டா என்னும் ப்ரஹ்மதேவர், 'நீ யோகிகளைப் படை' என்று பகவானிச்சையாலும், விதியினாலும் அவராதீநமாகப் படைப்பவர், கேவலம் சொந்த இச்சையால் உலக ஸ்ருஷ்டி செய்பவரல்ல; செய்ய வல்லவரல்ல; என் குலப் பெரியோரோவென்னில்- கேவலம் தம் இச்சாமாத்ரத்தால் மாற்றிப் படைக்க வல்லவர் என்று 'இச்சாமாத்ராத்' என்பதன் கருத்து. ப்ரஹ்மதேவர் 'யதாபூர்வமகல்பயத்' என்றபடி முன் கல்பங்களில் இருந்த முறையிலேயே புது உலக ஸ்ருஷ்டி செய்வார்; எம் குலத்தோர், அவர்ஸ்ருஷ்டியை மாற்றி வேறு இதற்கு முன் இல்லாத மாதிரியாய் தம்மிஷ்டப்படி ஏற்படுத்த வல்லவர் என்பது அபராதா என்பதால் ஸூசிக்கும் ரஸம், யதா பூர்வம் என்பதற்கு நேர் வேறுபாடு, ஸம்விதாதும்- முன்பிருந்ததையழித்து மாற்றி நூதனமாய்ப்படைக்கையில் அவஸரத்தினால் கோணமாணவென்று படைக்காமல், நன்றாகவே கொஞ்சமும் ஊனமின்றி பூர்ணமாய்ப் படைக்கவல்லவர் என்பதை ஸம் என்பதால் வ்யஞ்சனம் செய்கிறார். க்ஷமாணாம்- அதற்கு வேண்டிய ஸாமர்த்யத்தையுடையவர், பூர்ணயோக்யதையுள்ளவர். செய்ய நேரவிடினும் ஸாமர்த்யமுள்ளவரே. ப்ரக்ருதிமஹதாம்- அவர்கள் அதிகம்பீரமான ஸ்வபாவமுடையவர்கள்; மற்றொருவர் ஸஹாயத்தை யாசிக்க லஜ்ஜைப்படுவார். இக்ஷ்வாகூணாம்- வாலியிடம் பேசத்துடங்குகையிலேயே 'இக்ஷ்வாகூணாம் இயம் பூமி: ஸசைலவநகாநநா' என்றுகூறிய ச்லோகத்தை இங்கே கவி நினைக்கிறார். இக்ஷ்வாகுகுலசக்ரவர்த்திகளின் நாடாகும் பூமண்டலம் முழுவதும். அதை பரதர் ராஜாவாக ஆளுகிறார், அவருடைய கட்டளைப்படி நடக்கும் அதிகாரி நான், என்று தமக்கு ராஜாவைப்போல் சிக்ஷிக்கும் அதிகாரத்தைக் கூறினார். ஈத்ருசீம் வேலாம்- வர்ணனையில்

அடங்காத இத்தனை தீனமான ஆபத்துதசையை, ப்ரேக்ஷ்ய-நீர் கண்கூடாய் நேரில்பார்த்து, கேவலம் ஓர் மானிடனான எனக்கு வந்த இக்கஷ்டதசையைப் பார்த்து நீர் கருணை புரிய வேண்டுமென்று மட்டும் நான் உம்மை ஆச்ரயித்து யாசிப்பதல்லாமல், இக்ஷ்வாகுகுலப் பெரியோரெல்லாருக்கும் வந்திருக்கும் அவமானமும் ஆபத்தும் இது; அவர்களை நோக்கியும் நீர் இந்த ப்ரார்த்தனைப்படி இலங்கை செல்ல வேணும். எங்களுக்காகவும், ஜநகர் செல்வப் புத்திரியின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவும் இலங்கை செல்லும் பணியை ஏற்கும் நீர் என்பதாக மேலே கூறுகிறார்— ‘அஸ்மத்தேதோ: ஜநகதநயாஜீவிதார்த்தம் ச கச்சன்’ என்று இதில் அஸ்மத் என்பதில் முன்கூறிய ‚எங்கள் குலப்பெரியோர்களுக்காகவும்’ என்பதையும் கருத்தில்சேர்த்துக்கொள்ளலாம். மத்தேதோ: என்று கூறவில்லை. அவர்களை முன்னிட்டுக் கொண்டு அக் கோஷ்டியில் என்னையும் சேர்த்துக்கொள்ளலாம். ப்ரேக்ஷ்ய— நாங்கள் திண்டாடும் திண்டாட்டத்தைக் கண்ணாரக்கண்டு, (கண்டவுடனே) ‘ப்ரேக்ஷ்ய கந்தும்’ என்பதால் பார்த்தவுடனே ஸஹிக்காமல் உடனே நீர் இலங்கைக்குப் பாந்து ஸீதையிடம் செல்வது தான் உமக்கு மிகவுசிதமானது. நான் ஈஷத்து விளம்பத்தையும் பொருக்க க்ஷமனில்லாத அத்யந்த ஆர்த்தன். ‘ஸம்ச்ரிதத்ராண ஹேதோ:— தடுக்கக்கூடாத மிக்க பலமான ஹேதுவை இங்கே குறிக்கிறார். உம்மை நான் சரணமாக ஆபதுத்தாரணம் செய்யும் ரக்ஷகனாக ஸமாச்ரயணம் செய்திருக்கிறேன். ஸம் என்பதால் காலதாமதத்தைப் பொருக்கக் கூடாத அத்யந்தம் ஆர்த்தனாய் என்பதும் கருத்து. இங்கே எல்லாம் ‘ஸம்’ ஸம்பூர்ணமே. ஸம்விதாதும், ஸம்ச்ரிதம், ஸமுசிதம் என்று மூன்று ஸம் சொற்கள். ராக்ஷஸீம் ராஜதாநீம் லங்காம்— ஆளும் ராக்ஷஸரையும், வஸிக்கும் ராக்ஷஸரையும் போல ராக்ஷஸீநகரமும் மாயக் கபடங்கள் நிரம்பியது. த்ரிகூடே லப்தஸம்ஸ்தாம்— த்ரிகூடபர்வதத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. கூடா: என்பது கபடத்தையும் மோசத்தையும் சொல்லும். ஜலதிபயஸா லக்ஷ்யாலக்ஷ்யே— கண்ணுக்குத் தெரிவதும் மறைவதுமாயிருக்கும்; ராக்ஷஸர்களும் அந்த மாயசக்தியுள்ளவர்கள். ‘ராக்ஷஸா: கூடயோதின:’; திருவடி ‘ஸம்ஹ்ருத்ய ச புரீம் லோகம் விக்ரமேண மஹாயஶா:, சந்தஸ் ஸ புருஷவ்யாக்ர: ஸ்ரஷ்டும் புநரபி ப்ரஜா’: என்று ராமனுடைய ஸர்வஶக்தியைப் பற்றிக் கூறியதையும், ‘ஜகத் ஸஶைலம் பரிவர்த்தயாம்யஹம்’ என்று கோபபாரவசராய் ராமன் தம் மானுஷநினைப்பை மறந்து தேவகந்தர்வ மநுஷ்யர்களோடு கூடிய வுலகம் முழுவதையும் அழித்து வேறாகப் படைத்துவிடுகிறேன் என்று சொன்னதையும் நினைப்பூட்டுகிறார். இந்த ஶக்தி தம்முடைய பெரியோர்களுக்கு உள்ளதாக ராமன் இங்கே தம் ப்ரபாவத்தை அவர்களுடையதாகப் புகழ்கிறார்.

பம்பாய் சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

பம்பாயிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நமது பத்திரிகைக்கு கௌரவ ஏஜண்டாக இருக்க நாம் நேரில் ப்ரார்த்தித்ததின் பேரில் ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம் P. R. ஸுந்தரராஜ ஐயங்கார் ஸ்வாமி இசைந்துள்ளார். ஆகையால் பம்பாய் சந்தாதாரர்கள் அவரிடம் தங்கள் சந்தாபாக்கியையும் இவ்வருஷச் சந்தாவையும் செலுத்தலாமென்று ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீஸந்நிதியில் ப்ரசுரிக்கும் புஸ்தகங்கள் இவரிடம் கிடைக்கும்.

மானேஜர்.

श्रीः

॥ श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

श्री शारीरकार्चना

॥ शास्त्रम् ॥

ओं स्वप्राप्तेः स्वयमेव साधनभूताय परब्रह्मणे नमः

(द्विकः)

सिद्धाय नमः

साध्याय नमः

(अध्यायाः)

सकलवेदान्तसमन्विताय नमः

सकलेतरप्रमाणाद्यविहताय नमः

सकलफलसाधनाय नमः

सकलपरमप्राप्याय नमः

(पादाः) ब्रह्मणे नमः என்று சேர்த்துக் கொள்ளலாம்

स्रष्टे ब्रह्मणे नमः

देहिने ,, नमः

स्वनिष्ठाय ,, नमः

निरवधिमहिम्ने नमः

अपास्तबाधाय नमः

श्रिताप्ताय नमः

ओं स्वाद्युचितजननकृते नमः

इन्द्रियाद्युचितजननकृते नमः

संसृतितन्त्रवाहिने नमः

निर्दोषत्वादिरम्याय नमः

बहुभजनपदाय नमः

स्वार्हकर्मप्रसाद्याय नमः

पापच्छिदे नमः

ब्रह्मनाडीगतिकृते नमः

अतिवहते नमः

साम्यदाय नमः

(अधिकरणानि) प्रथमाध्याय प्रथमपादः

स्रष्ट्रे नमः என்று ஒவ்வொன்றிலும் சேர்த்துக்கொள்ளலாம்

व्युत्पत्तिसिद्धाय स्रष्ट्रे नमः १

लक्षणवते नमः

शास्त्रैकवेद्याय नमः

परमपुरुषार्थभूताय नमः

ओं स्वेच्छातः सर्वहेतवे नमः

शुभगुणविभवानन्तनिस्सीमहर्षाय नमः

शुद्धाकर्मोत्थदिव्याकृतये नमः

अनुपधिकाकाशनादिस्वभावाय नमः

सप्राणाप्राणभेदव्यतिभिदुरजगत्प्राणनाय नमः

१० दिव्यदीप्तये नमः

प्राणेन्द्राद्यन्तरात्मने नमः ११

(प्रथमाध्यायद्वितीयपाद:)

(देहिने नमः என்று ஒவ்வொன்றிலும் சேர்த்துக் கொள்ளலாம்)

स्वाधीनाशेषसत्तास्थितियतनतया सर्वभावेन तिष्ठते नमः

ग्रस्ताशेषाय नमः

अक्षिनित्यस्थितये नमः

अखिलतनवे नमः

कल्पिताग्न्यादिगात्राय नमः

स्वर्लोकाद्यङ्गवैश्वानरमतिविषयाय नमः ६

(प्रथमाध्याय तृतीयपाद:)

(स्वनिष्ठाय என்று சேர்த்துக்கொள்ளலாம்)

विश्वात्मने स्वनिष्ठाय नमः

ओं अनन्तभूम्ने ,, नमः

२० नियमनधृतिकृते ,, नमः

मुक्तभोग्यस्वभावाय ,, नमः

दह्रस्वधारसर्वाय ,, नमः

हृदयपरिमितावस्थया सर्वयन्त्रे नमः

देवादीनामुपास्याय नमः

वसुमुखविविधैः स्वात्मभावेन सेव्याय नमः

शूद्राद्योपास्त्यनर्हाय नमः

नामरूपैककर्त्रे नमः १०

(प्रथमाध्याय चतुर्थपाद:)

(निरवधिमहिम्ने नमः என்று சேர்த்துக்கொள்ளலாம்)

साङ्ख्योक्तप्रक्रियाकथनजन्याक्षेपाविचाल्याय नमः

साङ्ख्याभिमतसृजिकथनजन्याक्षेपाविचाल्याय नमः

३० साङ्ख्यप्रसंख्यानकथनजन्याक्षेपाविचाल्याय नमः

साङ्ख्यप्रोक्ताव्याकृतैक्यकथनजन्याक्षेपाविचाल्याय नमः

स्ववृजिनवचनजन्याक्षेपाविचाल्याय नमः

स्ववृजिनफलावध्ययोगकथनजन्याक्षेपाविचाल्याय नमः

कर्तृप्रकृतिभेदजन्याक्षेपाविचाल्याय नम

द्रुहिणशिवमुखानेकहेतुश्रुतिजन्याक्षेपाविचाल्याय नमः ८

(தொடரும்)

Let not your automobile
be stranded for want of
any spares at any time

THE BANGALORE AUTOMOBILES

DIRECT IMPORTERS

Trichy Road, Selam - 1.

Post Box No. **13.** *Grams:* **SPARES:** *Phone:* **112.**

BIGGEST IMPORTERS
of Parts and Accessories of
all Popular Cars and Trucks

SPECIALISTS
IN
**PERKINS DIESEL
ENGINES
&
PARTS**

Regd. M. 4437.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[துர்முகி ஞு உத்தராயணம் - சிசிர ருது மீனமீ 1957 மார்ச்சு மீ - ஏப்ரல் மீ]

14-3-57	பங்குனி மீ 1உ	வியாழக்கிழமை	ஷடசீதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; மீன சுக்ல சதுர்தசி திதி.
15-3-57	2உ	வெள்ளிக்கிழமை	○ பூர்ணிமை; மேலஹோபிலம் கருடஸேவை.
16-3-57	3உ	சனிக்கிழமை	கீழ் அஹோபிலம் கருடோத்ஸவம்.
17-3-57	4உ	ஞாயிற்றுக்கிழமை	ஹஸ்தம்; திருவரங்கத்தமுதனார், 21-வது பட்டம் ஸ்ரீபராங்குச யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
26-3-57	13உ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி திதி.
27-3-57	14உ	புதன்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
29-3-57	16உ	வெள்ளிக்கிழமை	சதுர்தசி திதி.
30-3-57	17உ	சனிக்கிழமை	போதாயந அமாவாஸ்யை; அதிதி.
31-3-57	18உ	ஞாயிற்றுக்கிழமை	அமாவாஸ்யை.
1-4-57	19உ	திங்கட்கிழமை	யுகாதிப்பண்டிகை.
5-4-57	23உ	வெள்ளிக்கிழமை	பஞ்சமி - ஷஷ்டி திதித்வயம்.
6-4-57	24உ	சனிக்கிழமை	ஸப்தமி திதி.
9-4-57	27உ	செவ்வாய்க்கிழமை	ஸ்ரீராமநவமி.
10-4-57	28உ	புதன்கிழமை	ஏகாதசி திதி.
11-4-57	29உ	வியாழக்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
12-4-57	30உ	வெள்ளிக்கிழமை	பங்குனி உத்திரம்; மீனசுக்ல த்ரயோதசிதிதி.

[ஹேவிளம்பி ஞு உத்தராயணம் வஸந்த ருது மேஷ மீ]

13-4-57	சித்திரைமீ 1உ	சனிக்கிழமை	மேஷரவி 15-31; விஷு; ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி; தமிழ்வருஷப்பிறப்பு
14-4-57	2உ	ஞாயிற்றுக்கிழமை	○ பூர்ணிமை; சூன்ய திதி.
25-4-57	13உ	வியாழக்கிழமை	ஏகாதசி.
26-4-57	14உ	வெள்ளிக்கிழமை	த்வாதசி; ஹரிவாஸரம் 5-19. பூரட்டாதி; 32-வது பட்டம் ஸ்ரீவீரராகவ யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
29-4-57	17உ	திங்கட்கிழமை	● அமாவாஸ்யை.

R 760 TIRUVALLUR-

Printed & Published by Sri J. Rangachariar S…
Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sansk…